بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

இதழ் 43 - 45

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1445 ரபீயுஸ்ஸானீ 10-24 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402

26 அகா -நுபுவ்வத்09 ★ 26 அக்டோபர்-09 நவம்பர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَرَاَ الۡمُجۡرِمُوۡنَ النَّارَ فَظَنُّوۡۤا اَنَّهُمۡ
مُّوَاقِعُوۡهَا وَلَمۡ يَجِدُوۡا عَنۡهَا مَصۡرِفًا ﴿۵۴﴾

**பொருள்**

குற்றவாளிகள் அந்த நெருப்பைக் கண்டு தாங்கள் அதில் விழக் கூடியவர்களே என்று புரிந்து கொள்வர். அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான எந்த இடத்தையும் பெற மாட்டார்கள்.

(அல்கஹ்ஃப்:54)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**தூய வாழ்வினை பெறுவதற்கு மனிதன் அல்லாஹ்வின் வழியில் தனது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் (தனது) இறுதி மூச்சு வரை அர்பபணித்து விட வேண்டும். அசல் விஷயம் என்னவென்றால் உலகம் தனது வாழ்வின் நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக, உலகை பெறுவதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்கு சேவை செய்யும் வகையில் உலகை சம்பாதிக்க வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### இறைவனின் அடியார்கள் எவர்?

இறைவன் தங்களுக்கு வழங்கிய தங்களது வாழ்க்கையை அவனுடைய வழியிலேயே அர்ப்பணித்து விடுகின்றவர்களே அந்த மக்கள் ஆவர். அவர்கள் தங்களது இன்னுயிரை இறைவனின் வழியில் அர்ப்பணிப்பது மற்றும் தமது செல்வத்தை அவனது வழியில் செலவிடுவது ஆகியவற்றை இறையருளாகவும், தங்களது நற்பேறாகவும் கருதுகின்றனர். ஆனால், எந்த மக்கள் உலகின் செல்வங்களையும், சொத்துகளையும் தமது வாழ்வின் நோக்கமாக ஆக்கிக் கொள்கின்றனரோ அத்தகைய மக்கள் ஒரு கனவுலகத்தில் மார்க்கத்தை பார்க்கின்றனர். ஆனால், இது உண்மையான நம்பிக்கையாளர் மற்றும் உண்மையான முஸ்லிமுடைய பணி அல்ல.

இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். அதாவது, மனிதன் தூய வாழ்க்கையை அடைவதற்காக அல்லாஹ்வின் வழியில் தனது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் (தனது) இறுதி மூச்சு வரை அர்பணித்து விட வேண்டும். ஆக, அல்லாஹ் சுயமே இந்த அர்ப்பணித்தலின் பக்கம் சுட்டிக் காட்டியவாறு கூறுகின்றான்: அவ்வாறன்று, எவர் தம்மை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்து நற்செயல் செய்பவராகவும் விளங்குகிறாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடத்தில் உண்டு. அவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் இருக்காது. (இறந்த காலம் பற்றி) அவர்கள் துயரமும் அடைய மாட்டார்கள். (2:113)

இந்த இடத்தில் இதன் பொருள் இதுவே ஆகும். அதாவது, ஓர் இயலாமை மற்றும் தாழ்மையின் ஆடையை உடுத்திக் கொண்டு இறை சன்னிதானத்தில் விழுந்து விட வேண்டும். மேலும் தனது உயிர், செல்வம், கண்ணியம், நோக்கம் மேலும் என்னவெல்லாம் மனிதனிடம் இருக்குமோ அவற்றை இறைவனுக்காகவே அர்ப்பணித்து விட வேண்டும். மேலும், உலகம் மற்றும் அதன் அனைத்து விஷயங்களும் மார்க்கத்திற்கு சேவை செய்வதற்காக ஆகி விட வேண்டும். உலகை சம்பாதிப்பதன் நோக்கம்

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

**கிறிஸ்தவ சமுதாயங்களின் முன்னேற்றத்தின் காலத்தில் இஸ்லாத்தில் நிலை பெற்றிருக்கும் ஒரு ஜமாஅத் இருக்கும். மேலும், அதனுடன் இணைந்து கொள்வதற்கான கட்டளை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த வசனத்திற்கு நேரடி பொருள்படுபவர்கள் அக்காலத்தில் இஸ்லாத்தின் முன்னேற்றத்தை அரசியல் காரணிகளுடன் தொடர்புடையதாக ஆக்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் ஆவர். அந்த தவறில் ஈடுபட்டு விடாதீர்கள். மாறாக, காலையிலும், மாலையிலும் தொழுகைகளில் துஆக்கள் செய்து கொண்டிருக்கும் அந்த மக்களுடன் இணைந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்**

وَاصۡبِرۡ نَفۡسَکَ مَعَ الَّذِیۡنَ یَدۡعُوۡنَ رَبَّهُمۡ بِالۡغَدٰوۃِ وَالۡعَشِیِّ
یُرِیۡدُوۡنَ وَجۡهَهٗ وَلَا تَعۡدُ عَیۡنٰکَ عَنۡهُمۡ ۚ تُرِیۡدُ زِیۡنَۃَ الۡحَیٰوۃِ الدُّنۡیَا ۚ
وَلَا تُطِعۡ مَنۡ اَغۡفَلۡنَا قَلۡبَهٗ عَنۡ ذِکۡرِنَا وَاتَّبَعَ هَوٰىهُ
وَکَانَ اَمۡرُهٗ فُرُطًا ﴿۲۹﴾

பொருள்: தங்கள் இறைவனின் விருப்பத்தை நாடிக் காலையிலும், மாலையிலும் அவனை அழைக்கின்றவர்களுடன் நீர் சேர்ந்திருப்பீராக. நீர் இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை விரும்பி உம் பார்வைகள் அவர்களை விட்டும் கடந்து செல்ல வேண்டாம். நாம் எவனது உள்ளத்தை நம்மை நினைப்பதிலிருந்து கவனமற்றதாக்கி விட்டோமோ அவனுக்குக் கட்டுப்படாதீர். அவன் அற்ப ஆசையைப் பின்பற்றுகின்றான். அவனின் நிலை எல்லை கடந்ததாகும். (18:29)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் மேலே கூறப்பட்டதன் பொருளை மேலும் அல்லாஹ் விளக்கிவிட்டான். இந்தக் கட்டளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) வழங்கப்படவில்லை. மாறாக, அந்தக் காலத்தை பார்ப்பதற்கு வாய்ப்பு பெறும் திருக்குர்ஆனை ஓதக்கூடிய அந்த நபருக்கு கூறப்படுகின்றது. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ சுயமே தொழுகைளை நிறைவேற்றி வந்தார்கள். காலையிலும், மாலையிலும் தொழுது கொண்டிருக்கக் கூடிய அந்த மக்களுடன்

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

## நபிமொழி

**ஒருவருடைய உரிமையை அபகரிக்கும் பாவம் மற்றும் தண்டனை**

(2458) ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது அறையின் வாசலில் சிலர் சண்டையிடுகின்ற சப்தத்தை கேட்டார்கள். அப்போது (சண்டையிட்டுக் கொண்டிருந்த) அந்த நபர்களிடம் சென்றார்கள். மேலும் கூறினார்கள்: நான் ஒரு மனிதனே ஆவேன். மேலும் என்னிடத்தில் ஒரு தரப்பு(வழக்கை எடுத்துக் கொண்டு) வருகின்றது என்றால், உங்களில் எவர் மற்றவரை விட தனது கருத்தை மிகவும் சிறப்பாக எடுத்துரைக்கக் கூடியவராக இருப்பாரோ; அவர் உண்மையைக் கூறியுள்ளார் என்று நான் கருதி, அவரது கூற்றின் அடிப்படையில் அவருக்கு ஆதரவாக வழங்கிவிடுவேனாயின், (யதார்த்த நிலைக்கு மாற்றமாக) எந்த நபருக்கு ஒரு முஸ்லிமுடைய உரிமையை எடுத்துக் கொள்வதற்கு நான் தீர்ப்பு வழங்குகின்றேனோ அவருக்கு வழங்கப்படுவது நெருப்பின் ஒரு துண்டேயாகும். அவர் விரும்பினால் அதனை அவர் பெற்றுக் கொள்ளட்டும்; விரும்பினால் அதனை விட்டு விடட்டும்.

**நயவஞ்சகனின் நான்கு பண்புகள்**

(2459) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரிடம் (இந்த) நான்கு பண்புகள் இருக்குமோ அவர் நயவஞ்சகர் ஆவார். அல்லது எவரிடம் நான்கில் ஒரு பண்பு காணப்படுகின்றதோ அவர் அதனை விட்டுவிடாத வரை அவரிடம் நயவஞ்சகத்தின் ஒரு பண்பும் இருக்கும். அவர் பேசும்போது பொய் பேசுவார். வாக்குறுதி செய்தால் பின்னர் அதனை முறித்து விடுவார். மேலும் ஒப்பந்தம் செய்தால் பின்னர் மோசடி செய்துவிடுவார். மேலும் சண்டையிட்டால் ஏசிபேசுவார்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மஸாழிம், காதியான் பதிப்பு, 2008-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போருக்கும் ரோம் தொடர்பான முன்னறிவிப்பிற்குமிடையில் உள்ள தொடர்பு மற்றும்**

**சூரா அர்ரூமில் கூறப்பட்டுள்ள மகத்தான முன்னறிவிப்பைக் குறித்து ஈமானை வலுவூட்டக் கூடிய விரிவான குத்பா**

**பத்ர் போருடன் ரோமானியப் பேரரசுடைய வெற்றிக்கும் ஒரு தொடர்பு உள்ளது**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த சம்பங்களைக் குறித்து முன்னறிவிப்பு செய்திருந்தார்களோ அவற்றுள் மிகவும் தெளிவான மற்றும் வெளிப்படையான ஒரு முன்னறிவிப்பு ரோம் தொடர்பான முன்னறிவிப்பு ஆகும்**

**அந்த வசனம் மக்காவில் இறங்கியபோது பாரசீகர்கள் ரோமானியர்களின் மீது வெற்றிக் கொள்ள வேண்டும் என்று மக்காவில் இருந்த இணை வைப்பாளர்கள் விரும்பி வந்தனர். ஏனெனில் இவர்களும், அவர்களும் சிலை வணங்கிகளாக இருந்தனர். பாரசீகத்தின் மக்கள் ஈரானியர்கள் சிலை வணங்கிகளாக இருந்தனர்**
**மேலும், மக்காவாசிகளும் சிலை வணங்கிகளாக இருந்தனர்**
**ரோமானியர்கள் பாரசீகர்களின் மீது வெற்றிக் கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பியிருந்தனர்**
**ஏனெனில் அவர்கள் வேதம் வழுங்கப்பட்டவர்களாக இருந்தனர்**
**திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள இந்தக் காலத்துடன் தொடர்புடைய முன்னறிவிப்புகளையும் பார்க்க வேண்டும்; பெற்றோர்கள் தாமும் திருக்குர்ஆனை ஓத வேண்டும்; மேலும் தங்களது பிள்ளைகளுக்கும் அந்த முன்னறிவிப்புகளை எடுத்துக் காட்ட வேண்டும். அவை இஸ்லாத்தின் உண்மைக்கு ஒரு சான்று ஆகும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 செப்டம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தபூக்** மாதம் **22 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பத்ர் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தப் போருடன் தொடர்புடைய சம்பவங்களைக் குறித்து நான் சிறிது காலத்திற்கு முன்னர் எடுத்துரைத்திருந்தேன். இன்று பத்ர் போர் சம்பவங்களின் அடிப்படையிலேயே (அதனுடன்) தொடர்புடைய சில விஷயங்களையும், சம்பவங்களையும் நான் எடுத்து வைப்பேன். வரலாற்றில் அவற்றிற்கான குறிப்பு உள்ளது. மேலும், அதனை அறிவதும் அவசியமாகும். முன்பு (குத்பாக்களில்) கூறப்பட்டது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்கு பிறகு மூன்று நாட்கள் வரை பத்ர் போர் மைதானத்தில் தங்கியிருந்தார்கள். மூன்றாம் நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒட்டகங்களின் பல்லக்குகளை கட்டுவதற்கு கட்டளையிட்டார்கள். பத்ர் மைதானத்திலிருந்தே அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது (பின்) ஹாரிஸா (ரலி) ஆகியோரை பத்ர் போர் வெற்றிக் குறித்த நற்செய்தியின் தூதுச் செய்தியை வழங்குவதற்காக மதீனாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். பின்னர், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கி திரும்புவதற்கான பயணத்தை தொடங்கினார்கள். இந்த வெற்றிப் பெற்ற குழுவினருடன் மக்கத்து குறைஷியர்களின் எழுபது கைதிகளும் இருந்தனர். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 420,425. 426, பாடம் கஸ்வத்துல் பத்ருல் குப்ரா)

அவர்களில் இரண்டு கைதிகள் தங்களுடைய கொடூரமான போர் குற்றங்களின் காரணமாக அப்போதைய பொதுவான நடைமுறைக்கேற்ப வழிப்பாதையிலேயே கொலை செய்யப்பட்டனர்; அந்த இருவரில் ஒருவன் நஸ்ர் பின் ஹாரிஸ் என்றும் இரண்டாவது நபர் உக்பா பின் அபீ முஈத் ஆவான் என்றும் வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், இதில் எல்லா வரலாற்று ஆசிரியர்களுக்கும் உடன்பாடில்லை.

பத்ர் போரிலிருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃப்ராஃ என்ற இடத்தை அடைந்தபோது பின்னர் நஸ்ர் பின் ஹாரிஸ் கொல்லப்பட்டான். மேலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனைக் கொன்றார்கள் என்று அல்லாமா இப்னு இஸ்ஹாக் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவியா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 438, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001-ம் ஆண்டு)

அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) என்னைக் கொலை செய்ய இருக்கின்றார்; ஏனெனில் அவர் என்னை எத்தகைய பார்வையில் பார்த்தார் என்றால் அதில் எனது மரணம் எனக்கு தென்பட்டது என்று நஸ்ர் கைதியாக இருந்த நிலையில், தனது கூட்டாளியிடம் கூறினான்.

அல்லாஹவின் மீது ஆணையாக! மதிப்பச்சத்தின் காரணமாக அப்படி (தோன்றி) உள்ளது. உன் மீது ஏற்பட்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மதிப்பச்சத்தின் காரணமாகவே உனக்கு அப்படி தோன்றுகின்றது என்று அந்த நபர் நஸ்ரிடம் கூறினார்.

அப்போது, முஸ்அபே! இந்த நபரைக் காட்டிலும் நீ இரத்த உறவின் அடிப்படையில் எனக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவாய். எனவே அவர் என்னை கைதிகளில் ஒருவராக ஆக்கிக் கொள்ளும்படி நீ உனது தோழரிடம் பேசு!;அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் என்னைக் கொலை செய்ய இருக்கின்றார் என்று முஸ்அப் பின் உமைர் அவர்களிடம் நஸ்ர் கூறினான்.

அதற்கு, நீ! அல்லாஹ்வின் வேதத்தைக் குறித்து இன்ன இன்ன விஷயங்களை பேசிவந்தாய்; மேலும், நீ! நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இவ்வாறெல்லாம் பேசி வந்தாய்; மேலும் நீ! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களுக்கு இன்ன துன்பங்களையெல்லாம் கொடுத்து வந்தாய் (அல்லவா?) என்று முஸ்அப் அவர்கள் கூறினார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 429 -430, பாடம்- கஸ்வத்துல் பத்ருல் குப்ரா, தாருல் மஃரிஃபா, பெய்ரூத்)

ஆக, உம்முடைய இந்த பழைய விஷயங்கள் இருக்கின்றன. நீ கொலை செய்யப்படுகின்றாய் என்றால் பின்னர் நீ செய்த இந்தக் குற்றத்தின் காரணமாக கொலை செய்யப்படக் கூடும்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: நஸ்ர் பின் ஹாரிஸுடைய சகோதரியான குதைலா பின்த் ஹாரிஸ் தனது சகோதரனின் மரணத்தையொட்டி சில கவிதைகளை கூறினாள். சிலரை பொருத்த வரை இதனை அவனது மகள் கூறியிருந்தார். மேலும்,அவர் பிற்காலத்தில் இஸ்லாத்தை தழுவிவிட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்தக் கவிதைகளை பற்றி தெரிய வந்தபோது அன்னார் (ஸல்) அதிகமாக அழுதார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னாரின் தாடி நனைந்து விட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: எனக்கு இந்தக் கவிதைகளைக் குறித்து இதற்கு முன்னர் அதாவது நஸ்ர் பின் ஹாரிஸ் கொலை செய்யப்படுவதற்கு முன்னரே தெரிய வந்திருந்தால் பின்னர் நான் அவர் மீது

கருணை காட்டியவாறு அவரை மன்னித்திருப்பேன்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பாடம்- கஸ்வா பத்ருல் குப்ரா, தாருல் மஃரிஃபா பெய்ரூத்)

ஆனால், சில வரலாற்று ஆசிரியர்கள் இதுபோன்ற கவிதைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவற்றைக் கேட்டு அழுதார்கள் என்ற அறிப்பையும் மறுக்கின்றார்கள். சிலர் சம்பவத்தையே மறுக்கின்றனர். எவ்வாறு இருப்பினும், சரியானது என்ன? என்பதை அல்லாஹ்வே நன்கு அறிந்திருக்கின்றான். உண்மையிலே இந்த சம்பவம் நடந்துள்ளதென்றால் பின்னர் இந்த வெளிப்பாடு ஒன்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மென்மையான உள்ளத்திற்கு அப்பாற்பட்டது இல்லை. அன்னார் (ஸல்) மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவராக இருந்தார்கள். அன்னாரின் உள்ளத்தில் கருணை இருந்தது. இதேபோன்று நஸ்ர் பின் ஹாரிஸைக் குறித்து இந்த அறிவிப்பும் வருகின்றது. அதாவது, நான் கூறியது போன்று அவர் கொலை செய்யப்படவில்லை. மாறாக, உயிருடன் இருந்திருந்தார். மேலும், ஹுனைன்ப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு நூறு ஒட்டகங்கள் உள்ளத்தை இணைப்பதற்காக வழங்கியிருந்தார்கள்.(ஷரஹ் அஸ்ஸர்கானீ அலல் மவாஹிபுல் லித்துனியா, தொகுதி 1, பக்கம் 482, தாருல் குதுபில் இல்மியா)

பின்னர் பத்ர் மைதானத்திலிருந்து திரும்பி வரும்போது இரண்டாவதாக கொலை செய்யப்பட்டது தொடர்பாக வரலாற்றில் வருகின்ற குறிப்பு என்பது உக்பா பின் அபீ முஈத் பற்றியதாகும். அவன் மதீனாவிற்கு திரும்புகின்ற வழிப் பாதையில் இர்க் ஸப்யா என்ற இடத்தில் வைத்து கொலை செய்யப்பட்டான். ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் அன்ஸாரி (ரலி) அவர்கள் உக்பாவை கொன்றார்கள். மேலும் மற்றோர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவனைக் கொன்றார்கள். (அஸ்ஸீரத்துன் நபிவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 438- 439, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஒரு நூலாசிரியர் எழுதுகின்றார்: நஸ்ர் பின் ஹாரிஸ் மற்றும் உக்பா பின் அபீ முஈத் இருவரும் இஸ்லாத்திற்கு எதிராக போர் புரிவதற்கான நெருப்பை மூட்டக் கூடியவர்களை சேர்ந்தவர்களாக இருந்தனர். மேலும், முஸ்லிம்களின் மீது துன்பங்கள் மற்றும் வேதனைகளின் மலைகளை இறக்கக் கூடியவர்களின் தலைவர்களாக இருந்தனர். (ஸீரத் என்ஸைக்லோபீடியா, தொகுதி 5, பக்கம் 490-491, மக்தபா தாருஸ் ஸலாம்) எனவேதான் அவர்களுக்கு தண்டனைக் கிடைத்தது.

எவ்வாறு இருப்பினும், கொலையுண்டவர்களைக் குறித்த சுருக்கம் என்னவென்றால், உண்மையிலேயே அவர்கள் இருவரும் வழிப் பாதையில் கொலை செய்யப்பட்டார்களா? இல்லையா? என்று இருவரைக் குறித்தும் உறுதியாக தெரியவில்லை. ஏனெனில், எப்படிப்பட்ட சில அறிவிப்புகள் இருக்கின்றன என்றால், அவற்றில் உக்பா பின் அபீ முஈத் பத்ர் மைதானத்திலேயே கொலை செய்யப்பட்டு விட்டான் என்று அதில் மிகவும் விளக்கமாக இடம்பெற்றுள்ளது.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 477, தாருல் குதுபில் இல்மியா 2001)

நஸ்ர் பின் ஹாரிஸைக் குறித்து இரண்டு வகையான அறிவிப்புகள் உள்ளன. அவன் கொலை செய்யப்பட்டதாகவும் உள்ளது. மேலும், கொலை செய்யப்படவில்லை என்றும் உள்ளது. இன்னும் கூறப்போனால் பிறகு உயிருடன் இருந்தார் என்றும்,மேலும் ஹுனைன் போரில் அவர் இஸ்லாத்தை தழுவினார் என்றும் வந்துள்ளது.எனினும் இந்த அறிவிப்புகள் மிகவும் பலவீனமானதாக கருதப்படுகின்றன.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் பத்ர் போர்க் கைதிகளில் கொலையுண்டவர்களில் இந்த இருவரையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது இவ்வாறு வந்துள்ளது: சில வரலாற்று ஆசிரியர்கள் கைது செய்யப்பட்ட தலைவர்களில் உக்பா பின் முஈத்துடைய பெயரையும் எடுத்துரைத்துள்ளனர். மேலும், பிறகு, அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் கொலை செய்யப்பட்டுவிட்டான். ஆனால், இது சரியானது அல்ல. உக்பா பின் அபீ முஈத் போர் மைதானத்தில் கொல்லப்பட்டிருந்தான் என்று ஹதீஸிலும், வரலாற்றிலும் மிகவும் விளக்கமாக அறிவிப்பில் வருகின்றது.அவன் போர் மைதானத்தில் கொலை செய்யப்பட்டிருந்தான். அவன் கைது செய்யப்பட்டிருக்கவில்லை.

ஒரு குழியில் அடக்கம் செய்யப்பட்டிருந்த அந்த மக்கத்து தலைவர்களின் சடலங்களில் அவனுடைய சடலமும் இடம்பெற்றிருந்தது. ஆயினும், நஸ்ர் பின் ஹாரிஸ் கைது செய்யப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டான் என்று பெரும்பாலான அறிவிப்புகளில் இருந்து தெரிய வருகின்றது. மேலும், அவனது கொலைக்கான காரணம் இதுவாகும். அதாவது, மக்காவில் நிராகரிப்பாளர்களின் கைகளால் கொல்லப்பட்ட அப்பாவி முஸ்லிம்களின் கொலைக்கு நேரடி பொறுப்பாளிகளாக இருந்த மக்களைச் சேர்ந்தவர்களில் ஒருவனாக அவன் இருந்தான். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபி மற்றும் இஸ்லாத்தின் துவக்கத்தில் மிகவும் அநியாயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களுக்கு முன்னால் கொலை செய்யப்பட்டிருந்தவருமான ரபீப் பின் அபீ ஹாலா அவர்களின் கொலையாளிகளில் நஸ்ர் பின் ஹாரிஸும் அடங்குவான். ஆயினும், நஸ்ரை தவிர வேறு எந்தக் கைதியும் கொலை செய்யப்படவில்லை என்பது உறுதியாகும். அதேபோன்று எதிரியாக இருப்பது மற்றும் போரில் முஸ்லிம்களுக்கு எதிராக பங்கு பெறுவது ஆகிய காரணங்களினால் கைதிகளை கொலை செய்வதற்கான நடைமுறை இஸ்லாத்தில் இருந்தது.

எனவே இது தொடர்பாக பிற்காலத்தில் ஒரு சிறப்பான கட்டளையும் திருக்குர்ஆனில் இறங்கியது. இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். ஏராளமான அறிவிப்புகளில் நஸ்ர் பின் ஹாரிஸ் கொலை செய்யப்பட்டதற்கான குறிப்பு வருகின்றது என்றபோதிலும் வேறு சில அறிவிப்புகளும் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து அவன் கொலை செய்யப்படவில்லை ; மாறாக பத்ர் போருக்கு பிறகு ஒரு குறிப்பிட்ட காலம் வரை உயிருடன் இருந்தான்; மேலும் இறுதியில் ஹுனைன்ப் போர் சந்தர்ப்பத்தின்போது முஸ்லிமாக மாறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களின் வட்டத்தில் இணைந்து விட்டார் என்றும் நிரூபணமாகின்றது. ஆனால், முதன்மையான குறிப்புகள் அதாவது முந்தைய அறிவிப்புகளுக்கு எதிரில் இந்த அறிவிப்புகள் பொதுவாக பலவீனமானதாக கருதப்படுகின்றன. அல்லாஹ்வே நன்கறிவான்.

எவ்வாறு இருப்பினும் கைதிகளில் எவரேனும் கொலை செய்யப்பட்டிருந்தால் பழிக்குப் பழியாக நஸ்ர் பின் ஹாரிஸ் கொலை செய்யப்பட்டிருந்தான். மேலும், இதனைக் குறித்தும் இந்த அறிவிப்பு வருகின்றது. அதாவது, அவனைக் கொலை செய்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கருணைக்கான விண்ணப்பம் செய்யப்பட்டிருந்த அவனுடைய சகோதரியின் வேதனை மிக்க கவிதை வரிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செவிமடுத்தார்கள். அப்போது, இந்தக் கவிதைகள் எனக்கு முன்பே கிடைத்திருந்தால் பின்னர் நான் நஸ்ரை மன்னித்திருப்பேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும் நஸ்ரைத் தவிர வேறு எந்தக் கைதியும் கொலை செய்யப்படவில்லை. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல்- ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 366-377)

இது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் முடிவாகும். இதனை அன்னார் (ரலி) வரலாற்று நூல்களில் இருந்து எடுத்துள்ளார்கள்.

பத்ர் போரில் இணை வைப்பாளர்களின் பெரும் பெரும் தலைவர்கள் உட்பட எழுபது நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களின் கரங்களால் கொல்லப்பட்டார்கள். மேலும், எழுபது நபர்களே முஸ்லிம்களின் கரங்களால் கைது செய்யப்பட்டிருந்தார்கள். கைதிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 49 மற்றும் 74 என்ற எண்ணிக்கையும் அறிவிப்புகளில் கிடைக்கின்றது. சில அறிவிப்புகள் இருக்கின்றன. ஆனால், பிரபலமானதும், சரியானதும் என்பது எழுபது நிராகரிப்பாளர்கள் கைது செய்யப்பட்டதே ஆகும். (மஆரிஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 6, பக்கம் 245, தாருல் மஆரிஃப் லாஹூர்)

வரலாற்றின் பல்வேறு நூல்களில் எழுபது என்ற இந்த எண்ணிக்கையே எழுதப்பட்டுள்ளது. ஸஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபிகள் பத்ர் போர் நாளன்று இணை வைப்பாளர்களுடைய 140 நபர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி இருந்தனர். அதாவது 70 பேர் கைதிகளாகவும், 70 கொலையுண்டவர்களாகவும் இருந்தனர். (ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 3986)

பத்ர் போருக்கு பிறகு இணை வைப்பாளர்களின் கைதிகள் இஸ்லாத்தில் இணைந்தனர். அவர்கள் இஸ்லாத்தை தழுவினர். அவர்களைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; ஸஹாபா பெருமக்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையை அமல்படுத்தியவாறு பத்ர் போர் கைதிகளுடன் மிகவும் அழகிய முறையில் நடந்து வந்தனர். இந்த போர்க் கைதிகளில் சில நற்பேறு பெற்ற மக்களும் இருந்தனர். அவர்கள் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் ஸஹாபா பெருமக்களின் உயரிய

நல்லொழுக்கத்தினால் தாக்கமடைந்து முஸ்லிம் ஆகிவிட்டனர். அவர்களில் சிலரின் பெயர்களை அன்னார் விரிவாக எழுதியும் இருக்கின்றார்கள். அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப், அகீல் பின் அபீ தாலிப், நவ்ஃபல் பின் ஹாரிஸ், அபூல் ஆஸ் பின் ரபீஃ, அபூ உஸைர்(இவரின் பெயர் ஸுராரஹ் பின் உமைர் அப்தரீ ஆகும்)ஸாயிப் பின் அபீ ஹுபைஷ், காலித் பின் ஹிஷ்ஷாம் மக்ஸூமீ, அப்துல்லாஹ் பின் அபீ ஸாயிப், முத்தலிப் பின் கன்தாப் அபூ வதாஅஃ ஸஹ்மீ, அப்துல்லாஹ் பின் உபை பின் கலஃப் ஜுமஹ்ஹீ, வஹப் பின் உமைர் ஜுமஹ்ஹீ, ஸுஹைல் பின் அம்ர் ஆமிரீ, ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் ஸவ்தா (ரலி) அவர்களின் சகோதரரான அப்துல்லாஹ் பின் ஸம்ஆ,கைஸ் பின் ஸாயிப், உமையா பின் கலஃபுடைய அடிமை நிஸ்தாஸ், ஸாயிப் பின் உபைத். இவர்கள் அனைவரும் பத்ர் போர் நாளன்று தமது ஈட்டுத் தொகையை செலுத்தி இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் ஃபீ ஸீரத் கய்ருல் இபாத், தொகுதி 4, பக்கம் 78 - 79, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993)

பத்ர் போர் வெற்றியுடன் ரோமானியப் பேரரசின் வெற்றிக்கும் ஒரு தொடர்பு உள்ளது.

ரோமானியப் பேரரசின் வெற்றியைப் பற்றியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். மேலும், நான் கூறியது போன்று அதன் தொடர்பு பத்ர் போருடனும் உள்ளது. எனவே இங்கு அதனை எடுத்துரைப்பதும் உகந்ததாகும். நுபுவ்வத்தின் ஐந்தாவது வருடம் சூரா ரோம் இறங்கியது. அதில் ரோமானியப் பேரரசின் வெற்றி தொடர்பாக முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது.

(தலாயில் அந்நுபுவ்வத்துன் லில் பைஹ்கீ, தொகுதி 7, பக்கம் 143, பாப் - திக்ர் அஸ்ஸூரா அல்லதீ நஸலத் பி மக்கா,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1988)

இதன் விளக்கத்தை நான் பின்னர் எடுத்துரைப்பேன். அல்லாஹ் சூரா அர்ரூமுடைய ஆரம்ப வசனங்கள் இறங்கியபோது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மக்காவின் எல்லாப் புறமும் இந்த சூராவின் இந்த வசனங்களை ஓதியவாறு அறிவிக்கத் துவங்கினார்கள்.

غُلِبَتِ الرُّوۡمُ

فِيۡۤ اَدۡنَى الۡاَرۡضِ وَهُمۡ مِّنۡۢ بَعۡدِ غَلَبِهِمۡ سَيَغۡلِبُوۡنَ ۔

فِيۡ بِضۡعِ سِنِيۡنَ ۔

பொருள்: ரோமானியர்கள் வெற்றி கொள்ளப்பட்டனர். அருகில் உள்ள நாட்டில், மேலும், அவர்கள் தங்கள் தோல்விக்குப் பின் வெற்றி பெறுவர். மூன்று முதல் ஒன்பது வருட காலத்திற்குள்(அர்ரூம்: 2 -5)

இது மக்காவில் நடந்த விஷயம் ஆகும். இந்த வசனம் இறங்கியபோது பாரசீகர்கள் ரோமானியர்களின் மீது வெற்றிக் கொள்ள வேண்டும் என்று மக்காவில் இருந்த இணை வைப்பாளர்கள் விரும்பி வந்தனர். ஏனெனில் இவர்களும், அவர்களும் சிலை வணங்கிகளாக இருந்தனர். பாரசீகத்தின் மக்கள் ஈரானியர்கள் சிலை வணங்கிகளாக இருந்தனர். நெருப்பை வணங்கக் கூடியவர்களாக இருந்தனர். மேலும், மக்காவாசிகளும் சிலை வணங்கிகளாக இருந்தனர். எனவே பாரசீக மக்கள் வெற்றி பெற வேண்டும் என்று அவர்கள் விரும்பியிருந்தனர். ரோமானியர்கள் பாரசீகர்களின் மீது வெற்றிக் கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பியிருந்தனர். ஏனெனில் அவர்கள் வேதம் வழங்கப்பட்டவர்களாக இருந்தனர்.

இதனை அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் குறிப்பிட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் இதனைக் குறிப்பிட்டார்கள். அப்போது, அவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விடுவார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதாவது ரோமானியர்கள் வெற்றி பெற்று விடுவார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதனை இணை வைப்பாளர்களிடம் குறிப்பிட்டார்கள். அப்போது, எங்களுக்கிடையிலும் உங்களுக்கிடையிலும் ஒரு காலத்தை நிர்ணயித்துக் கொள்ளுங்கள் அதவாது பந்தயம் கட்டிக் கொள்ளுங்கள். நாங்கள் வெற்றிப் பெற்று விட்டால் பின்னர் எங்களுக்கு இன்ன இன்ன விஷயங்கள் செய்ய வேண்டும். ஒருவேளை நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள் என்றால் உங்களுக்கு இன்ன இன்ன விஷயங்கள் செய்யப்படும் என்று அவர்கள் கூறினர்.

ஆக, ஐந்து ஆண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டது. ஓர் அறிவிப்பின் அடிப்படையில் 6 ஆண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டது. ஷரஹ் ஸுனன் திர்மிதி தஹ்ஃபத்துல் அஹ்வதீயில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ரோமானியர்கள் பாரசீகர்களின் மீது வெற்றிப் பெற்ற நாளன்று நம்பிக்கையாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், இந்த வெற்றியின் செய்தியுடன் அவர்களுக்கு அதாவது இணை வைப்பாளர்களுக்கு எதிராக பத்ரில் அவர்களுக்கு உதவிக்கான நற்செய்தியை எடுத்துக் கொண்டு ஜிப்ராயீல் (அலை) அவர்கள் இறங்கியபோது பத்ர் போர் நாளன்று அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தது.

(துஹ்ஃபத்துல் அஹ்வஸீ ஷரஹ் ஸுனன் அத்திர்மிதி, தொகுதி 2, பக்கம் 2169, மக்தபா பைத்துல் அஃப்கார் அத்தவ்லியா)

பத்ர் போருடன் இதற்கு இந்த தொடர்பு உள்ளது. அதாவது, எந்த நாளன்று பத்ர் போரில் வெற்றிக் கிடைத்ததோ அதே நாளன்று ரோமானியர்களின் வெற்றியைக் குறித்த நற்செய்தியும் கிடைத்தது.

ஸஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு உள்ளது. இதன் விளக்கவுரையில் அல்லாமா பத்ருத்தீன் அய்னீ (ரஹ்) ரோம் தொடர்பான முன்னறிவிப்பைக் குறித்து குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பாரசீகர்கள் மற்றும் ரோமானியர்களுக்கிடையில் போர் நிகழ்ந்தபோது பாரசீகர்கள் மீது ரோமானியர்கள் வெற்றிக் கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பியிருந்தனர். ஏனெனில் அவர்கள் வேதம் வழங்கப்பட்டவர்களாக இருந்தனர். ரோமானியர்களின் மீது முஸ்லிம்களுக்கு அனுதாபம் இருந்தது. ஏனெனில் ரோமானியர்கள் வேதம் வழங்கப்பட்டவர்களாக இருந்தனர். அதேநேரம் குறைஷிய நிராகரிப்பாளர்கள் பாரசீகர்களின் வெற்றியை விரும்பிக் கொண்டிருந்தனர். ஏனெனில், அவர்கள் இணை வைப்பாளர்களாக இருந்தனர். குறைஷிய நிராகரிப்பாளர்களும் சிலை வணக்கம் செய்து வந்தனர். எனவே இந்த விஷயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் அபூஜஹ்ல் ஆகியோருக்கிடையில் பந்தயம் கட்டப்பட்டது.

அங்கு بِضۡعِ என்ற சொல் உள்ளது. மேலும் , بِضۡعِ என்பதோ 9 வருடங்கள் அல்லது பத்து வருடங்களைக் குறிக்கின்றது.

எனவே காலத்தை கூட்டுங்கள் என்று அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர்கள் அவ்வாறே செய்தார்கள். எனவே ரோமானியர்கள் வெற்றி பெற்று விட்டனர். அல்லாஹ் கூறினான்:

الٓمّٓ ۔ غُلِبَتِ الرُّوۡمُ

فِيۡۤ اَدۡنَى الۡاَرۡضِ وَهُمۡ مِّنۡۢ بَعۡدِ غَلَبِهِمۡ سَيَغۡلِبُوۡنَ ۔

فِيۡ بِضۡعِ سِنِيۡنَ ؕ لِلّٰهِ الۡاَمۡرُ مِنۡ قَبۡلُ وَمِنۡۢ بَعۡدُ ؕ

وَيَوۡمَئِذٍ يَّفۡرَحُ الۡمُؤۡمِنُوۡنَ ۔ بِنَصۡرِ اللّٰهِ

இதன் மொழியாக்கம் இவ்வாறாகும்:

அலிஃப் லாம் மீம்(நான் அல்லாஹ்! நான் எல்லாம் அறிந்தவன்) ரோமானியர்கள் வெற்றிக் கொள்ளப்பட்டனர். அருகில் உள்ள நாட்டில். மேலும் அவர்கள் தங்கள் தோல்விக்குப் பிறகு மீண்டும் வெற்றி பெறுவர்; சில வருடங்களிலே(அதாவது மூன்று முதல் ஒன்பது ஆண்டுகாலத்திற்குள்). முன்னும், பின்னும் ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியதாகும். மேலும், அந்நாளில் நம்பிக்கையாளர்கள் மகிழ்வார்கள்.(அர்ரூம்: 2-5)

அந்த நேரத்தில் பந்தயம் கட்டுவது ஆகுமானதாக இருந்தது என்று ஷஃபீ கூறுகின்றார்கள். (உம்தத்துல் காரீ, ஷரஹ் ஸஹீஹுல் புகாரி, தொகுதி 7, பக்கம் 29, தாருல் ஃபிக்ர் பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த சம்பங்களைக் குறித்து முன்னறிவிப்பு செய்திருந்தார்களோ அவற்றுள் மிகவும் தெளிவான மற்றும் வெளிப்படையான ஒரு முன்னறிவிப்பு ரோம் தொடர்பான முன்னறிவிப்பு ஆகும்.

அரேபியாவின் இரண்டு திசைகளிலும் ரோமானியர்கள் மற்றும் பாரசீகர்களின் அரசாங்கங்கள் நிலை பெற்றிருந்தன. அந்த நேரத்தில் ஈரானிய மன்னனாக குஸ்ரூவும் ரோமானிய மன்னனாக ஹிர்குலும் இருந்தனர். இரண்டு பேரரசுகளுக்கிடையிலும் ஒரு நீண்ட காலமாக போருக்கான தொடர் இருந்து வந்தது. நபித்துவ வருகையின் ஐந்தாம் ஆண்டில், கி.பி 614-ம் வருடம் இந்த இரண்டு அண்டை அரசாங்கங்களுக்கிடையில் ஓர் இரத்தம் சிந்தும் போர் துவங்கியது. இரண்டு சமுதாயங்களிலும் எந்தவொரு சமுதாயமும் இஸ்லாமிய மார்க்கத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்ற போதிலும் ரோமானியர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை பின்பற்றக் கூடியவர்களாகவும், வேதம் வழங்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். ஈரானியர்களின் கொள்கைகள் மக்கத்து இணை வைப்பாளர்களின் கொள்கைகளுக்கு பொருத்தமானவையாக இருந்தன. எனவே கண்டிப்பாக முஸ்லிம்களுக்கு ரோமானிய கிறிஸ்தவர்களுடனும், மக்கத்து இணை வைப்பாளர்களுக்கு ஈரானியர்களுடனும் அனுதாபம் இருந்தது. எனவே முஸ்லிம்களும், குறைஷிய நிராகரிப்பாளர்களும் இருவரும் போரின் முடிவுக்காக மிகவும் ஆவலுடன் காத்திருந்தனர். இந்த இரண்டு அரசாங்கங்களின் எல்லைகளும் டைகிரிஸ் நதி மற்றும் யூப்ரடீஸ் நதிகளின் கரைகளில் சென்று இணைந்து வந்தன. ரோமானிய பேரரசு கிழக்கில் ஆசியாவின் எல்லைகளான ஈராக், சிரியா, பாலஸ்தீனம் மற்றும் எகிப்தின் எல்லை வரை பரவியிருந்தது. ஈரானியர்கள்

இரண்டு பக்கத்திலிருந்தும் தாக்குதல் நடத்தினர். ஒரு பக்கம் அவர்கள் டைகிரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதியின் கரைகளிலிருந்து சிரியாவை நோக்கி முன்னேறினர். மேலும் மற்றொரு பக்கம் ஆசியாவின் எல்லைகளின் புறமிருந்து ஆஸர்பைஜானில் இருந்து ஆர்மீனியா வழியாக தற்போதுள்ள அநாதவ்லியாவில் நுழைந்து விட்டனர். மேலும், இரண்டு புறத்திலிருந்தும் ரோமானியர்களை பின் வாங்கச் செய்து செய்து, கடலில் தள்ளிவிட்டனர். சிரியாவின் திசையில் அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக அந்த புனித பூமியின் ஒவ்வொரு நகரமாக ரோமானியர்களிடம் இருந்து பறித்துக் கொண்டனர். 614-ம் ஆண்டில் பாலஸ்தீனம் மற்றும் அதன் புனித நகரமான ஜெருஸலேம் ஈரானியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சென்றுவிட்டது. வணக்கஸ்தலங்களை இடித்து தரைமட்டமாக்கினர். மார்க்க அடையாளங்களை இழிவுபடுத்தினர். ஈரானிய பேரரசனுடைய ஆட்சி பீடம் முப்பதாயிரம் கொலையுண்டவர்களின் தலைகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டது. அதாவது கொலை செய்து அவர்களின் தலைகள் அரசக் கோட்டையில் வைக்கப்பட்டன. ஈரானியர்களின் வெற்றி காட்டாற்று வெள்ளம் போன்று அங்கிருந்து முன்னேறி 616-ம் ஆண்டு நைல் பள்ளத்தாக்கில் அதாவது எகிப்தின் அரசாங்கத்தை சூழ்ந்து கொண்டது. மேலும், இறுதியில் இஸ்கந்தரியாவின் எல்லையில் சென்று நின்று விட்டது. மேலும், மற்றொரு பக்கம் அனைத்து ஆசியாவின் பகுதியையும் தோற்கடிக்கச் செய்து பாஸ்ஃபோரஸின் எல்லையில் சென்று நின்றது. மேலும், கிஸ்தன்தனிய்யாவின் சுவர்களில் சென்று முட்டி மோதி நின்றது. ரோமானியப் பேரரசின் தலைநகரத்திற்கு முன்னால் ஈரானின் வெற்றிப் படை சென்று தனது கூடாரத்தை நிலை பெறச் செய்தது. மேலும், ரோமானியர்களுக்கு பகரமாக ஈராக், சிரியா மற்றும் பாலஸ்தீனம். எகிப்து மற்றும் ஆசியாவின் பரந்த பகுதிகள் வரையிலும் ஈரானியர்களின் அரசாங்கம் நிலை பெற்று விட்டது. எல்லா இடத்திலும் நெருப்பு ஆலயங்கள் கட்டப்பட்டன. மேலும், மஸீஹிற்கு பகரமாக நெருப்பு மற்றும் சூரியனை வணங்கும் பலவந்தமான நடைமுறை அமல்படுத்தப்பட்டது. ரோமானிய பேரரசின் இந்த அழிவைக் கண்டு ரோமானிய பேரரசனின் பரந்து பட்ட நாட்டில் கிளர்ச்சி தலைதூக்கிவிட்டது. ஆஃப்ரிக்காவிலும் குழப்பம் உருவானது. கஸ்தன்தனிய்யாவிற்கு அருகிலும் கூட ஐரோப்பாவின் பல்வேறு வகையான சமுதாயங்கள் கொலை மற்றும் கொள்ளையில் மும்முரமாகிவிட்டன. சுருக்கமாக அந்நேரத்தில் ரோமானியர்களின் ஒவ்வொரு அங்கமும் ஆட்டம் கண்டிருந்தது.

போரின் முடிவு எதிர்பார்க்கப்பட்டதற்கு எதிராக எப்படிப்பட்ட விளைவை வெளிப்படுத்தியது என்றால் பின்னர் நிச்சயமாக அதன் விளைவாக முஸ்லிம்களுக்கு வேதனையும், நிராகரிப்பாளர்களுக்கு மகிழ்ச்சியையும் கொடுத்தது. மேலும், எவ்வாறு எங்களின் சகோதரர்கள் வெற்றி பெற்றுள்ளனரோ இதேபோன்று நீங்கள் எங்களுடன் போர் புரிந்தால் பின்னர் நாங்களும் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் முஸ்லிம்களை ஏளனமாகப் பேசத் தொடங்கினர். நாங்கள் முஸ்லிம்களை வெற்றிக் கொண்டு விடுவோம் என்று நிராகரிப்பாளர்கள் கூறினர் என்பது இதிலிருந்து வெளிப்படுகின்றது. அந்நேரத்தில் இருந்த பரிதாபகரமான நிலை என்பது நாம் கண்டது போன்று மிகவும் மோசமானதாக இருந்தது. அவர்கள் தமது கிழக்குப் பகுதியில் இருந்த கட்டுப்பாடுகளின் ஒவ்வொரு அங்குலத்தையும் இழந்து இருந்தார்கள். கருவூலம் காலியாக இருந்தது. படைகள் சிதறுண்டு இருந்தன. நாட்டில் கிளர்ச்சிகள் உருவாகியிருந்தன. ரோமானியப் பேரரசன் ஹெர்குலிஸ் முழுக்க முழுக்க ஆடம்பரங்களில் மூழ்கியவனாகவும், கவனமற்றவனாகவும், சோம்பேறியாகவும், சந்தேகங்களால் சூழப்பட்டவனாகவும் இருந்தான். அரசனாக இருப்பதற்கு எந்தத் தகுதியும் அற்றவனாக இருந்தான். ஈரானியர்களின் படையின் வெற்றித் தளபதி கஸ்தன்தனிய்யாவின் வாசல்களை வந்தடைந்து ரோமானியர்களுக்கு முன்னால் கீழ் கண்ட நிபந்தனைகளை முன் வைத்தான்.

ரோமானியர்கள் வரி செலுத்த வேண்டும்.ஓராயிரம் டால்நட் தங்கம், ஓராயிரம் டால்நட் வெள்ளி,( டால்நெட் என்பது பண்டைய காலத்து யூனானிகளின் அளவீடு ஆகும். அது இன்றைய நாட்களில் 23 கிலோ கிராம் எடைக்கு சமமானது ஆகும்) ஓராயிரம் டால்நெட் பட்டுத் துணிகள், ஓராயிரம் குதிரைகள், ஓராயிரம் கன்னிப் பெண்கள் ஆகியவற்றை ஈரானியர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். ரோமானியர்களின் பலவீனமான நிலை எப்படி இருந்தது என்றால் அவர்கள் இந்த அவமானகரமான நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு விட்டனர். ரோமானிய பேரரசனின் தூதுவர் ஈரானிய அரசவையில் சமாதானத்திற்கான தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு சென்றபோது ஆணவம் கொண்ட ஈரானிய பேரரசன் குஸ்ரூ கொடுத்த பதில் இதுவாக இருந்தது: அதாவது, நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்கள்; சரிதான். ஆனால், எனக்கு இது வேண்டாம். அதாவது இவர் எடுத்து வந்த இந்த பொருட்கள் எனக்கு வேண்டாம்.மாறாக, ஹெர்குலிஸ் அரசனையே சங்கிலிகளால் கட்டி எனது அரியணைக்கு கீழ் கொண்டு வந்து நிறுத்தப்பட வேண்டும். மேலும், ரோமானியப் பேரரசன் சிலுவையில் அறையப்பட்ட தமது இறைவனை விட்டு விட்டு சூரிய தேவனுக்கு முன்னால் சிரம் பணியாத வரை நான் சமாதானம் செய்ய மாட்டேன்; கிறிஸ்தவத்திலிருந்து தவ்பா செய்து வராத வரை சமாதானம் செய்ய மாட்டேன் என்று அவன் கூறினான்.

ஆக, எழுதுகின்றவர்கள் எழுதியுள்ளனர். போரின் சூழலின் வடிவம் இவ்வாறு இருந்தது. அதாவது, போர்க்களத்திலிருந்து மிகவும் தொலைவில் ஓர் உலர்ந்த மற்றும் வறண்ட நிலத்தின் கல்மலையிலிருந்து ஓர் அமைதியின் இளவரசர் தோன்றினார். மேலும், உலக நடப்புகளுக்கு எதிராக இந்த ஒரு முன்னறிவிப்பை செய்திருந்தார். அதன் வசனங்களை நான் பின்னர் ஓதுவேன். அது திருக்குர்ஆனில் உள்ளது. எனவே முன்னறிவிப்பின் மகிமையை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த விளக்கத்தை நான் எடுத்துரைத்துள்ளேன்.

இந்த முன்னறிவிப்பு என்னவாக இருந்தது. நான் ஏற்கனவே ஓதிக் காட்டியிருந்தேன். தற்போது மீண்டும் ஓதுகின்றேன்;

الٓمّٓ ۔ غُلِبَتِ الرُّوۡمُ

فِیۡۤ اَدۡنَی الۡاَرۡضِ وَ ہُمۡ مِّنۡۢ بَعۡدِ غَلَبِہِمۡ سَیَغۡلِبُوۡنَ ۔

فِیۡ بِضۡعِ سِنِیۡنَ ۬ؕ لِلّٰہِ الۡاَمۡرُ مِنۡ قَبۡلُ وَ مِنۡۢ بَعۡدُ ؕ

وَ یَوۡمَئِذٍ یَّفۡرَحُ الۡمُؤۡمِنُوۡنَ ۔ بِنَصۡرِ اللّٰہِ ؕ یَنۡصُرُ مَنۡ یَّشَآءُ ؕ

وَ ہُوَ الۡعَزِیۡزُ الرَّحِیۡمُ ۔ وَعۡدَ اللّٰہِ ؕ

لَا یُخۡلِفُ اللّٰہُ وَعۡدَہٗ

பொருள்: ரோமானியர்கள் வெற்றி கொள்ளப்பட்டனர். அருகில் உள்ள நாட்டில், மேலும், அவர்கள் தங்கள் தோல்விக்குப் பின் வெற்றி பெறுவர். சில வருடங்களிலே(அதாவது மூன்று முதல் ஒன்பது ஆண்டு காலத்திற்குள்); முன்னும், பின்னும் ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியதாகும். மேலும் அந்நாளில் நம்பிக்கையாளர்கள் மகிழ்வார்கள்.அல்லாஹ்வின் உதவியினால், அவன் விரும்புவோருக்கு உதவுகின்றான். மேலும், ஆற்றல் மிக்கோனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான். அல்லாஹ்வின் வாக்குறுதி(யினை நன்கு நினைவிற் கொள்ளுங்கள்.) அல்லாஹ் தன் வாக்குறுதிக்கு மாற்றம் செய்வதில்லை. எனினும், பெரும்பாலான மக்கள் அறிவதில்லை. (அர்ரூம்: 2 -7)

எழுதுகின்றவர் எழுதியுள்ளார்: இந்த முன்னறிவிப்பு நிகழ்வுகளின் அடிப்படையில் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகவும், நம்ப முடியாததுமாக இருந்தது. அதாவது, இந்த விஷயம் (வெளிப்படையில் உண்மைக்கு) மிகவும் அப்பாற்பட்டதாக தெரிந்திருந்தது. எனவேதான், நிராகரிப்பாளர்கள் இது சரியாக இருக்கும் பட்சத்தில் பல ஒட்டகங்களை முஸ்லிம்கள் தோற்கின்ற நிலையில் பந்தயமாக கட்டியிருந்தனர். அப்போது முஸ்லிம்களுக்கும், நிராகரிப்பாளர்களுக்கும் சம்பவங்களின் அடிப்படையில் மிகவும் கடுமையான எதிர்பார்ப்பு இருந்தது. இறுதியில் சில ஆண்டுகளுக்கு பிறகு உலகின் எதிர்பார்ப்புக்கு மாற்றமாக நிலைமை தலை கீழாக மாறியது. ரோமுடைய வீழ்ச்சியின் வரலாற்றின் பிரபலமான நூலாசிரியரும் வரலாற்று ஆசிரியருமான எட்வர்ட் கிபோன் என்பவர் ஹெர்குலஸுடைய நிலைமைகளை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகின்றார்:

ரோமப் பேரரசன் தனது வாழ்வின் துவக்கம் மற்றும் இறுதியில் ஆடம்பர விரும்பியாகவும், பொதுமக்களின் துன்பங்களை நீக்க இயலாத மனிதனாகவும் இருந்தான். காலை மற்றும் மாலைப் பொழுதின் பனித்துளி சூரிய ஒளியில் மறைந்து விடுவதைப் போன்று அவனது நிலை இருந்தது.

இவர் ஆர்காடியோஸுடைய உதாரணத்தை வழங்கியுள்ளார். அவர் ரோமானிய பேரரசின் ஒரு மன்னன் ஆவார். அவருடைய காலம் கி.பி 378 முதல் 408 கி.பி வரையாகும். மிகவும் வலிமையானவராக இருந்தார். இதேபோன்று சீசரும் ஒரு பழைய இராணுவ ஜெனரலாக இருந்தார்.

எவ்வாறு இருப்பினும், ஹிர்குல் எந்த நேரத்தில் தனது எஞ்சிய படையை அழைத்துக் கொண்டு கிஸ்தன்தனிய்யாவிலிருந்து சென்றாரோ அப்போது மகத்துவ மிக்க ரோமானிய பேரரசின் இறுதிப் படை உலகத்திற்கு முன்னால் உள்ளது என்று மக்கள் கருதியிருந்தனர். ஆனால், அரேபியாவின் உம்மீ நபியின் முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் முழுமையடைந்தது. மேலும், முஸ்லிம்கள் பத்ர் போர் மைதானத்தில் குறைஷிய படையை தோற்கடித்திருந்த அந்த நேரத்தில் அதனை வழங்கியிருந்தார். ரோமானியர்கள் ஈரானியர்கள் மீது வெற்றிக்

கொண்டனர். கிழக்கத்திய பகுதிகளின் கட்டுபாடுகளில் இருந்த ஒவ்வொரு நகரத்தையும் திரும்பப் பெற்றார்கள். மேலும், ஈரானியர்களுக்கு பாஸ்ஃபோரஸ் மற்றும் நைல் நதியின் கரையோரங்களிலிருந்து வெளியேற்றி பின்னர் தஜலா மற்றும் ஃபராத் நதிக்கரையின் பக்கம் பின்னால் தள்ளிவிட்டனர்.

இந்த மகத்துவ மிக்க முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தின் தாக்கம் உலகை ஆச்சரியத்தில் உறையச் செய்து விட்டது. குறைஷிகளில் பலர் இந்த உண்மைத்துவத்தைக் கண்டு முஸ்லிம்களாகிவிட்டனர். மேலும், அந்நியர்களும் கூட இந்த முன்னறிவிப்பை ஒப்புக் கொண்டு வருகின்றனர். இந்த ஆச்சரியமளிக்கக் கூடிய முன்னறிவிப்பின் உண்மையின் தாக்கத்திலிருந்து மாற்றத்திற்கு ஆளாகி சம்பவம் நிகழ்ந்த 1200 ஆண்டுகளுக்கு பிறகு எட்வர்ட் கோபோன் கூறுகின்றார்: அதன் மொழியாக்கம் இவ்வாறாகும்: முஹம்மது (ஸல்) கிழக்குப் பகுதியின் இரண்டு மகத்துவ மிக்க வல்லரசுகளின் முகடுகளின் மீது அமர்ந்து கொண்டு அவர்கள் இருவரின் ஒருவர் மற்றவரை அழித்து விடக் கூடிய வலிமை மிக்க முயற்சிகளின் முன்னேற்றங்களை மனமகிழ்ச்சியுடன் ஆழமாக படித்துக் கொண்டிருந்தார். மேலும், ஈரானியர்களுக்கு வெற்றி மேல் வெற்றிக் கிடைத்துக் கொண்டிருந்த அந்த சமயத்தில், சில ஆண்டுகளில் ரோமானியக் கொடி வெற்றி மகுடம் சூடும் என்ற இந்த முன்னறிவிப்பை செய்வதற்கு துணிச்சல் கொண்டிருந்தார். எந்த நேரத்தில் இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்ததோ அந்நேரத்தில் இதை விட வேறு எந்த முன்னறிவிப்பும் கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்க முடியாது. இதனை எவராலுமே நம்ப முடியாததாக இருந்தது. ஏனெனில், ரோமானிய பேரரசின் ஒற்றுமை விரைவில் சிதறுண்டு விடும் என்பதை ஹெர்குலிஸ் மன்னனின் 12 வருட ஆட்சி அறிவித்துக் கொண்டிருந்தது.

ஹெர்குலிஸ் மன்னின் இயல்பில் இந்த திடீர் புரட்சி மற்றும் சம்பவங்களின் அடிப்படையில் ஆச்சரியமளிக்கத்தக்க மாற்றம் மற்றும் அதற்கான காரணிகளை பற்றிய விளக்கம் ரோமுடைய வரலாற்றின் ஆசிரியர்கள் விநோதமான விஷயங்களை உருவாக்கி வைத்துள்ளனர். ஆனால், அவர்களுக்கு என்ன தெரியும்?

இந்த விஷயத்தை அல்லாமா ஷிப்லீ நுஃமானீ ஸீரத்துன் நபி (ஸல்) என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

இந்த இரத்தம் சிந்தும் போரிலிருந்து தொலைவில் ரோமானியர்களின் உதவிக்காக ஒரு தூதுத்துவத்திற்கான கரம் இருந்தது. அதுவே இந்த புரட்சி மற்றும் மாற்றத்திற்கான மாபெரும் காரணியாக இருந்தது. முஸ்தத்ரிக் மற்றம் ஜாமிஃ திர்மிதியில் இவ்வாறு உள்ளது: ரோம் மற்றும் பாரசீகத்தினுடைய போர் துவங்கியபோது இணை வைப்பாளர்கள் ஈரானியர்களுக்கு ஆதரவாக இருந்தனர். ஏனெனில் அவர்களும் சிலை வணங்கிகளாக இருந்தனர். மேலும் முஸ்லிம்கள் ரோமானியர்களின் பக்கம் இருந்தனர். ஏனெனில், அவர்கள் வேதம் வழங்கப்பட்டவர்களாக இருந்தனர். அந்நேரத்தில் ஈரானியர்கள் ரோமானியர்களை தோற்கடித்துக் கொண்டு இருந்தனர். அப்போது சூரா அர்ரூம் இறங்கியது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உரத்தக் குரலில் அனைத்து இணை வைப்பாளர்களுக்கும் இந்த முன்னறிவிப்பை கேட்கச் செய்தார்கள். இந்த முன்னறிவிப்பிற்கு ஏதாவது ஆண்டுகளை நிர்ணயிக்கவும் என்று இணை வைப்பாளர்கள் கூறினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஐந்து ஆண்டு காலம் நிபந்தனையாக வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது கூறினார்கள்: بِضْعِ سِنِيْنَ என்ற சொல் மூன்று முதல் ஒன்பது வருட காலத்திற்கு கூறப்படுகின்றது.எனவே பத்து ஆண்டுகளுக்கு குறைவான காலக்கெடுவை நிர்ணயித்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆக, இந்த விளக்கத்திற்கு ஏற்ப 9 -ம் ஆண்டு பத்ர் போரின் சந்தர்ப்பத்தின்போது முன்னறிவிப்பு நிறைவடைந்தது; மேலும் ரோம் வெற்றி பெற்று விட்டது.

சில இளைஞர்களும், இளமை பருவத்தில் கால் வைக்கும் பிள்ளைகளும் கேட்கின்றனர். பலர் கடிதங்கள் எழுதுகின்றனர். இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்றும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே உண்மையான தூதர் ஆவார்கள்; மற்றவர்கள் இல்லை என்றும் எப்படி அறிந்து கொள்வது? என்று சில கடிதங்கள் கடந்த வாரத்தில் கூட வந்துள்ளன. இங்குள்ள சூழலின் தாக்கமும் அவர்கள் மீது ஏற்படத் துவங்கியுள்ளது. அவர்களுக்கு இஸ்லாத்தின் உண்மைத்துவத்தின் மீது சந்தேகம் ஏற்பட துவங்கிவிட்டது. அவர்கள் வரலாறு மற்றும் அந்நியர்களின் இந்தக் கருத்திலிருந்து நம்பிக்கை கொண்டு விட வேண்டும். மேலும், பின்னர் இக்காலத்தைக் குறித்து திருக்குர்ஆனில் இருக்கின்ற முன்னறிவிப்புளையும் அவர்கள் பார்க்க வேண்டும். பெற்றோர்கள் தாமும் திருக்குர்ஆன் ஓத வேண்டும். மேலும் தங்களது பிள்ளைகளுக்கும் இந்த முன்னறிவிப்புகளைக் காட்டி எவ்வாறு இவை இஸ்லாத்தின் உண்மைக்கு ஒரு சான்றாக உள்ளது என்பதையும் அவர்களுக்கு காட்ட வேண்டும். இஸ்லாத்தின் உண்மைக்கு ஆயிரம் சான்றுகள் உள்ளன. எனவே பெற்றோர்களும் பிள்ளைகளும் தங்களது அறிவை அதிகரித்துக் கொள்வது அவசியம் ஆகும்.

ஒரு கேள்வியை கேட்டு விடுவது மட்டும் போதுமானதல்ல. கேள்வி கேட்க வேண்டும் என்றால் பின்னர் சுயமே அறிவை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் இதேபோன்று நமது கிளை அமைப்புகள் இருக்கின்றன. அவையும் இது தொடர்பாகவும் அவர்களுக்கு அறிவை கொடுக்க வேண்டும். இந்தக் கேள்வி பல முறை என்னிடம் கேட்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இந்த விளக்கம் அவசியமானதாக இருந்தது. எனவே நான் இங்கு குறிப்பிட்டு விட்டேன். இனி நான் அசல் கருத்தின் பக்கம் வருகின்றேன்.

பத்ர் போர் ஹிஜ்ரத்தின் முதல் ஆண்டிலும், நபித்துவ ஆண்டின் பதினான்காவது வருடத்திலும் நடைபெற்றிருந்தது. இதற்கு ஒன்பது வருடத்திற்கு முன்னர் நபித்துவ வருகையின் ஐந்தாவது வருடமாக இருந்திருக்கும். இந்த அடிப்படையில் முன்னறிவிப்பின் காலம் நபித்துவத்தின் ஐந்தாவது வருடமாகவும், அது முழுமையடைந்ததற்கான காலம் நபித்துவத்தின் பதினான்காம் வருடம் அல்லது ஹிஜ்ரி ஒன்றாம் வருடம் ஆகும். சில மக்கள் இந்த முன்னறிவிப்பு முழுமையடைவதற்கான காலத்தை ஹுதைபிய்யா உடன்படிக்கையின் ஆண்டு அதாவது ஹிஜ்ரீ 6-ம் ஆண்டு என்று கூறுகின்றனர். இது சரியானது அல்ல. அநேகமாக மக்களுக்கு இதிலிருந்து ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது, ஸஹீஹுல் புகாரி போன்றவற்றில் இவ்வாறு உள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவர் இஸ்லாத்திற்கான அழைப்பிதழை எடுத்துக் கொண்டு கைஸரிடம் சென்றபோது அந்நேரத்தில் அந்த கைஸர் வெற்றிக்கு நன்றி தெரிவிப்பதற்காக சிரியாவிற்கு சென்றிருந்தார். மேலும், தூதுவர் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் காலத்தில் புறப்பட்டிருந்தார். எனவே, வெற்றிக் கிடைத்த தேதியும் இதுதான் என்று மக்கள் புரிந்த கொண்டு விட்டனர். ஆனால், இது பொய் ஆகும். வெற்றியின் தேதி இது கிடையாது. மாறாக, இது வெற்றிக் கொண்டாட்டத்தின் தேதி ஆகும்.

அந்நேரத்தில் அவர் வெற்றியைக் கொண்டாடுவதற்காக சென்றிருந்தார். எவ்வாறு இருப்பினும், வரலாற்றிற்கு பொருத்தமான இந்த விஷயம் நிரூபணம் ஆகியுள்ளது. அதாவது, 609-ல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை நிகழ்ந்தது. 610 முதல் ரோம் மற்றும் ஈரானியர்களுக்கிடையில் சச்சரவும் ஆரம்பமாகியிருந்தன. 613-ல் போர் பிரகடனம் செய்யப்பட்டது. 614-ம் ஆண்டு ரோமானியர்களின் தோல்வி ஆரம்பமானது. 616-ம் ஆண்டில் ரோமானியர்களின் தோல்வி முழுமையடைந்தது. 622-ம் ஆண்டிலிருந்து மீண்டும் ரோமானியர்களின் தாக்குதல் ஆரம்பமானது. 623-லிருந்து அவர்களின் வெற்றி ஆரம்பமானது. 625-ல் அவர்களின் வெற்றி முழுமை பெற்று விட்டது. இந்த வரிசைக் கிரமத்தில் பார்த்தால் பின்னர் இது வெளிப்படும். அதாவது, தோல்வியின் ஆரம்பம் முதல் வெற்றியின் துவக்கம் வரையிலான இணைப்பு என்பதும் கூட ஒன்பது ஆண்டுகளாக இருக்கின்றன; ஆயினும் தோல்வியின் முடிவிலிருந்து வெற்றியின் துவக்கம் வரையிலான இணைப்புகளும் கூட அதே ஒன்பது ஆண்டுகளாக இருக்கும் என்பதே இந்த முன்னறிவிப்பின் சிறப்பாகும்.

இந்த முழுமையான வெற்றிக்குப் பிறகு ஹெர்குலிஸ் முன்னர் இருந்த அதே சோம்பல் மற்றும் கேளிக்கையில் மூழ்கிய கைஸராக மாறிவிட்டான். இறை வல்லமையின் கரம் இந்த முன்னறிவிப்பை முழுமை செய்வதற்காக மட்டுமே சில ஆண்டுகளுக்காக அவனது இதயத்தையும், மூளையையும் அவனது கரத்தையும் விழிப்பூட்டியிருந்தது போன்று தெரிகின்றது. முன்னறிவிப்பு நிறைவடைந்ததற்கு பிறகு மீண்டும் முன்பை போன்று அதே சோம்பலின் படுக்கையில் உறங்கச் செய்துவிட்டது.

(அல்லாமா ஷிப்லீ நுஃமானீ அவர்களின் நூல் ஸீரத்துன் நபி (ஸல்) அவர்கள், தொகுதி 2, பாகம் 3, பக்கம் 313 - 316, இஸ்லாமியாத் நிறுவனம் செப்டம்பர் 2002)

இவை அனைத்தையும் அல்லாமா ஷிப்லீ நுஃமானீ அவர்கள் தமது வரலாற்று நூலில் எழுதியுள்ளார்கள்.

ரோமானியர்களின் வெற்றிக் குறித்து சில இடங்களில் வரலாற்றில் கருத்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

வேறுபாடு உள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அதற்கு இவ்வாறு தீர்வு வழங்கியுள்ளார்கள். அதாவது, சில அறிவிப்புகளில் ரோம் வெற்றி என்பது ஹுதைபிய்யா உடன்படிக்கை காலத்தில் கிடைத்திருந்தது என்ற அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆயினும், இந்த இரண்டு அறிவிப்புகளும் முரண்பட்டதல்ல. ஏனெனில், உண்மையில் ரோமுடைய வெற்றியின் காலம் பத்ர் போரின் காலத்திலிருந்து துவங்கி ஹுதைபிய்யா உடன்படிக்கையின் காலம் வரை பரவியிருந்தது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 377)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது குறித்து கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது மக்காவிலேயே இருந்தார்கள். அந்நிலையில் ஈரானியர்கள் ரோமானியர்களை தோற்கடித்து விட்டனர் என்ற செய்தி பிரபலமாகியிருந்தது. அதனால், நாமும் இணை வைப்பாளர்கள் ஆவோம்; ஈரானியர்களும் இணை வைப்பாளர்கள் ஆவர் என்று மக்காவாசிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஈரானியர்கள் ரோமானியர்களை தோற்கடித்தது என்பது ஒரு நல்ல சகுனம் ஆகும் என்று கருதினர். மேலும், மக்கா வாசிகளும் முஹம்மது (ஸல்) அவர்களை வெற்றிக் கொண்டு விடுவார்கள் என்பது இதன் பொருளாகும் என்று கருதினர். ஆனால்,

غُلِبَتِ الرُّوْمُ
فِيْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ بَعْدِ غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ
فِيْ بِضْعِ سِنِيْنَ

என்று ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கூறியிருந்தான். அதாவது ரோமானிய அரசாங்கம் சிரியாவின் பகுதியில் நிச்சயமாக தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த தோல்வியை இறுதியானதாக நீங்கள் கருதாதீர்கள். தோல்விற்ற பின் 9 ஆண்டுகளுக்குள் அவர்கள் வெற்றி பெற்று விடுவார்கள்.

இந்த முன்னறிவிப்பு வெளியான பிறகு மக்காவாசிகள் மிகவும் எள்ளி நகையாடினர். எந்த அளவிற்கு என்றால் இவ்வளவு தோல்வியடைந்த பிறகும் ரோம் முன்னேறிவிட்டால் பின்னர் நாங்கள் உமக்கு நூறு ஒட்டகங்களை கொடுப்போம்; ஆனால் அவ்வாறு நடக்கவில்லையென்றால் பின்னர் நீங்கள் எங்களுக்கு நூறு ஒட்டகம் கொடுக்க வேண்டும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சில நிராகரிப்பாளர்கள் நூறு ஒட்டகங்களுக்கான பந்தயத்தைக் கட்டினர். வெளிப்படையில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கான சாத்தியம் மிக மிகக் குறைந்து கொண்டே சென்று கொண்டிருந்தது. சிரியாவின் தோல்விக்குப் பிறகு ரோமானியப் படை தொடர்ந்து பல தோல்விகளை சந்தித்து பின்வாங்கிக் கொண்டே சென்றது. எந்த அளவுக்கு என்றால், ஈரானியப் படைகள் மர்மாரா கடலின் கரையோரங்கள் வரை சென்றடைந்து விட்டன. கஸ்தன்தனியா தனது ஆசிய அரசாங்களிடமிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு விட்டது. மேலும் ரோமானியர்களின் வலிமையான அரசாங்கம் ஒரு மாநிலமாக ஆகிவிட்டது. ஆனால், இறைவனின் கூற்று முழுமையடைய இருந்தது. மேலும் முழுமையடைந்தது.

அதிகமான நிராசையின் நிலையில் ரோமானியர்களின் அரசன் தனது சிப்பாய்களுடன் இறுதி தாக்குதல் நடத்துவதற்காக கஸ்தன்தனியாவிலிருந்து வெளியேறினான். மேலும், ஆசிய எல்லைப் புறப் பகுதியில் இறங்கி ஈரானியர்களுடன் ஓர் இறுதி யுத்தத்தை போன்ற யுத்தத்தை நடத்தினான். ரோமானிய வீரர்கள் எண்ணிக்கை மற்றும் தளவாடங்கள் குறைவாக இருந்தபோதிலும் திருக்குர்ஆனின் முன்னறிவிப்பிற்கேற்ப ஈரானியர்களை வெற்றிக் கொண்டனர். ஈரானியப் படை எப்படி விரண்டோடியது என்றால் ஈரானிய எல்லைகளில் விரே என்ற இடத்தை தவிர வேறு எங்கும் அவர்களின் கால்கள் நிலை நிற்க முடியவில்லை. பின்னர் ரோமானிய அரசாங்கத்தின் ஆஃப்ரிக்க மற்றும் ஆசியப் பகுதிகளில் இழந்த நாடுகள் மீண்டும் அவர்களின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 445)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அபூஜஹ்லிடம் பந்தயம் கட்டினார்கள். மேலும்,இந்த பந்தயம்

الٓمّٓ ۚ غُلِبَتِ الرُّوْمُ
فِيْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ بَعْدِ غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ

(அர்ரூம்: 2 -5) என்ற திருக்குர்ஆனின் இந்த முன்னறிவிப்பை அடித்தளமாக கொண்டிருந்தது.

மேலும் மூன்று ஆண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முன்னறிவிப்பின் வடிவத்தைக் கண்டு உடனடியாக தொலை நோக்குப் பார்வையுடன் செயல்பட்டார்கள். மேலும், நிபந்தனையில் சில மாற்றங்களை செய்யும்படி அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு கட்டளை வழங்கினார்கள். மேலும், بِضْعِ سِنِيْنَ என்ற சொல் மஜ்மல் ஆகும். மேலும் பெரும்பாலும் ஒன்பது ஆண்டுகளைக் குறிக்கும்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 310 -311)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஈரானிய மக்கள் இணை வைப்பாளர்களாக இருந்தனர். மேலும், கிறிஸ்தவராக இருந்த ரோமானிய கைஸர் உண்மையில் ஏகத்துவ வாதியாக இருந்தார்.

முஸ்லிம்கள் இணைந்ததற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: கிறிஸ்தவராக இருந்த ரோமானிய கைஸர் உண்மையில் ஏகத்துவ வாதியாக இருந்தார். மேலும் மஸீஹை இப்னுல்லாஹ் (அல்லாஹ்வின் மகன்) என்று ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. மேலும், திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ள மஸீஹைப் பற்றிய அந்தக் குறிப்பு அவருக்கு முன்னால் வைக்கப்பட்டபோது அவர் கூறினார்: எனது பார்வையில் திருக்குர்ஆன் கூறியுள்ள இந்த அந்தஸ்தை விட மஸீஹிற்கு அணு அளவு கூடுதலான அந்தஸ்தும் இல்லை. ஹதீஸிலும் அவரது சாட்சியம் புகாரியில் இடம் பெற்றுள்ளது. அதாவது நான் சாட்சி கூறுகின்றேன். தவ்ராத்தில் இடம் பெற்றுள்ள அதே கூற்றுதான் இது ஆகும்.மேலும், இவருக்கு நபித்துவத்தை காட்டிலும் கூடுதலான அந்தஸ்து (வேறு எதுவும்) இல்லை. அப்போதுதான் இந்த வசனம் இறங்கியது:

الٓمّٓ ۚ غُلِبَتِ الرُّوْمُ
فِيْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ بَعْدِ غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ

(அர்ரூம்: 2 - 5) அதாவது, ரோம் அப்போது தோற்கடிக்கப்பட்டு விட்டது. ஆனால், சிறிது காலத்தில் (9 ஆண்டில்) மீண்டும் வெற்றி பெற்றுவிடும்.ஹஸ்ரத் நபி (ஸல்) , இருவரின் ஆற்றல்களையும் அனுமானித்து விட்டிருந்தார்; பின்னர் அகப்பார்வையுடன் முன்னறிவிப்பு செய்துவிட்டார் என்று கிறிஸ்தவ மக்கள் மிகவும் ஏளனமாக கூறுகின்றனர்.

(அப்படியென்றால்) இதேபோன்று மஸீஹும் நோயாளிகளைக் கண்டு எவர் குணம் பெறுவதற்கு தகுதி வாய்ந்தவராக தென்பட்டு வந்தாரோ அவருடைய நோய்களை நீக்கி வந்தார் என்று நாம் கூறுகின்றோம்.

இங்கு மீண்டும் ஒப்பீடு செய்கின்றார்கள். மேலும் அன்னார் (அலை) அந்த மக்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறே அனைத்து அற்புதங்களும் அவர்களின் கைகளிலிருந்து சென்று விடுகின்றது. يَوْمَئِذٍ يَّفْرَحُ الْمُؤْمِنُوْنَ

அந்த நாளன்று நம்பிக்கையாளர்களுக்கு இரண்டு மகிழ்ச்சி இருக்கும். ஒன்றோ, பத்ர் போருக்கான வெற்றி மற்றொன்று, ரோமுடைய முன்னறிவிப்பு நிறைவேறுவது தொடர்பானது (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 298-299, 2022-ம் ஆண்டு பதிப்பு)

போரை பார்த்திருந்தார்கள். எனவே பத்ர் போரிலோ அதுபோன்ற நிலைமைகள் இருந்தன. அதன் வெற்றியின் நற்செய்தியோ அதனுடனேயே இருந்தது. மேலும், இந்த இரண்டு நற்செய்திகளும் ஒன்றாக கிடைத்திருந்தன என்று இந்த ஆட்சேபனை உள்ளது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: ரோம் மற்றும் ஈரானிய பேரரசுகள் தொடர்பான ஒரு வலிமையான முன்னறிவிப்பு திருக்குர்ஆனில் இடம் பெற்றிருப்பதைப் போன்று திருக்குர்ஆன் ஏராளமான முன்னறிவிப்புகளால் நிரம்பியுள்ளது. மஜூஸி பேரரசு ஒரு போரில் ரோமானிய பேரரசின் மீது வெற்றி கொண்டிருந்த மற்றும் அவர்களுடைய நாட்டிலிருந்து சிறிது நிலத்தை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் செய்யப்பட்டிருந்த முன்னறிவிப்பு ஆகும் இது. அப்போது மக்கத்து இணை வைப்பாளர்கள் பாரசீகர்களின் வெற்றியை தங்களுக்கு ஒரு நல்ல சகுனமாக புரிந்துக் கொண்டிருந்தனர். மேலும், பாரசீக பேரரசு படைப்பினங்களை வணங்குவதில் நம்முடன் இணைந்துள்ளனர் என்று அவர்கள் புரிந்து வைத்திருந்தனர். இதேபோன்று வேதம் வழங்கப்பட்டவருடன்எந்த நபியின் வேதம் ஒப்புமை கொண்டுள்ளதோ அந்த நபிக்கு நாமும் இவ்வாறு முடிவு கட்டுவோம் என்று அவர்கள் கருதியிருந்தனர். அப்போது இறைவன் திருக்குர்ஆனில், இறுதியில் ரோமானிய பேரரசுக்கு வெற்றி கிடைக்கும்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

என்ற இந்த முன்னறிவிப்பை இறக்கினான். இது ரோமுடைய வெற்றியுடன் தொடர்புடைய முன்னறிவிப்பாக இருந்தன் காரணத்தினால் இந்த சூராவின் பெயர் அர்ரூம் என்று வைக்கப்பட்டது. மேலும், அரேபியாவின் இணை வைப்பாளர்கள் நெருப்பு வணங்கிகளின் அரசாங்கத்தின் வெற்றியை தங்களது வெற்றிக்கான ஓர் அடையாளமாக கருதியிருந்தார்கள். எனவே எந்த நாளன்று ரோம் வெற்றி பெறுமோ அந்த நாளன்று முஸ்லிம்களும் இணை வைப்பாளர்கள் மீது வெற்றி பெறுவார்கள் என்று இதனையும் இறைவன் இந்த முன்னறிவிப்பில் கூறியிருந்தான். ஆக, அப்படித்தான் அது வெளிப்படவும் செய்தது.

இது தொடர்பான திருக்குர்ஆன் வசனம் இதுவாகும் الٓمّٓ ۔ غُلِبَتِ الرُّوۡمُ

ۙ فِیۡۤ اَدۡنَی الۡاَرۡضِ وَہُمۡ مِّنۡۢ بَعۡدِ غَلَبِہِمۡ سَیَغۡلِبُوۡنَ

.(அர்ரூம்: 2 -5) பொருள்: நான் இறைவன்! எல்லாம் அறிந்தவன்.) ரோமானியப் பேரரசு மிகவும் அருகில் உள்ள நாட்டில். வெற்றிக் கொள்ளப்பட்டு விட்டது. மேலும் அவர்கள் ஒன்பது ஆண்டுகளுக்குள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஈரானியப் பேரரசின் மீது மீண்டும் வெற்றி பெறுவர்; மேலும், அந்நாளில் நம்பிக்கையாளர்கள் மகிழ்வார்கள்.

ஆக, அவ்வாறே நிகழ்ந்தது. மேலும், மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஒன்பது ஆண்டுகளுக்குள் மீண்டும் ரோமானிய பேரரசு ஈரானிய பேரரசின் மீது வெற்றி பெற்றுவிட்டது. மேலும், அதே நாளன்று முஸ்லிம்களும் இணை வைப்பாளர்களை வெற்றிக் கொண்டனர். ஏனெனில், அந்த நாள் பத்ர் போருக்கான நாளாக இருந்தது. அதில் இஸ்லாமியர்களுக்கு வெற்றி கிடைத்திருந்தது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 320)

பின்னர் கூறினார்கள்: இது எப்படிப்பட்ட ஆச்சரியம் அளிக்கக் கூடிய மற்றும் கம்பீரம் மிக்க முன்னறிவிப்பு என்று தற்போது சீர்தூக்கிப் பாருங்கள். முஸ்லிம்களின் பலவீனம் மற்றும் இயலாமையின் நிலை சுயமே ஆபத்தில் இருந்தபோதும், எந்த ஏற்பாடுகளும், வலிமையும் இருந்திராத அதுபோன்ற நேரத்தில் இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. (முஸ்லிம்களின்) இந்தக் கூட்டம் விரைவில் அழித்து ஒழிக்கப்பட்டு விடும் என்று எதிரிகள் கூறிய நிலையில் இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. மேலும், அதில் காலக் கெடுவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

பின்னர் یَوۡمَئِذٍ یَّفۡرَحُ الۡمُؤۡمِنُوۡنَ என்று கூறி இரண்டு முன்னறிவிப்புகளாக ஆக்கப்பட்டன. அதாவது, எந்த நாளன்று ரோமானியர்கள் பாரசீகர்களை வெற்றிக் கொள்வார்களோ அதே நாளன்று முஸ்லிம்களும் வெற்றி பெற்று மகிழ்ச்சியடைவார்கள். ஆக, எவ்வாறு முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்ததோ அதேபோன்று பத்ர் போரின் முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டது. இங்கு ரோமானியர்கள் வெற்றி பெற்றனர். மேலும் அங்கு முஸ்லிம்கள் வெற்றி பெற்று விட்டனர்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 387, 2022-ம் ஆண்டு பதிப்பு)

எவ்வாறு இருப்பினும், இந்த தொடர் இனியும் தொடரும். இந்த சம்பவங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புடையவை ஆகும். எஞ்சியவை இன்ஷாஅல்லாஹ் எதிர் வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய ஃபராஸ் அலி அப்துல் வாஹித் ஸாஹிப் (யூ.கே) அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 47 வயதில் இறைநியதிக்கேற்ப மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் ஈராக்கைச் சேர்ந்தவராக இருந்தார்கள். 2012-ம் ஆண்டில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்திருந்தார்கள். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் மனைவியும் ஒரு மகளும் இருக்கின்றார்கள். அன்னார் திருக்குர்ஆனையும் மனனம் செய்திருந்தார்கள். குழந்தைப் பருவத்திலேயே மனனம் செய்திருந்தார்கள். பெரியவரானபோது தீவிரமான மார்க்க வழியை மேற்கொண்டவாறு மிகவும் தீவிரமான வகையைச் சேர்ந்த முஸ்லிமாகிவிட்டார்கள். இதை பார்ப்பது ஹராம் ஆகும் என்று அன்னார் வீட்டில் இருந்த டி.வியையும் விற்றுவிட்டார்கள்.

இவை ஹாரம் ஆகும் என்று வீட்டிலிருந்த அனைத்து புகைப்படங்களையும் கிழித்து விட்டார்கள். ஒரு சிறந்த ஓவியராக இருந்தார்கள். அதாவது ஒரு மவ்லவியின் தாக்கத்தின் கீழ் இருந்து கொண்டு மார்க்க அறிவை பெற்றபோது அவர் முற்றிலும் fanatic (மத அடிப்படை வாதி) ஆகிவிட்டார். எல்லா வகையான புகைப்படங்களை வரைவதிலிருந்தும் விலகிக் கொண்டார். ஆயினும் நான் சரியாக இருக்கின்றேனா? அல்லது தவறிழைக்கின்றேனா? இஸ்லாம் உண்மையா? பொய்யா? போன்ற சந்தேகங்கள் அவரது உள்ளத்தில் இருந்தன. அவருடைய ஒரு கிறிஸ்தவ வகுப்புத் தோழர் இருந்தார். சில காலத்திற்கு பிறகு அவரிடமிருந்து தாக்கத்திற்கு ஆளாகிவிட்டார். மேலும் இஸ்லாம் தொடர்பாக அவரது உள்ளத்தில் இருந்த சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் விடை கிடைக்காததன் காரணமாக பின்னர் இவர் கிறிஸ்தவர் ஆகிவிட்டார். பின்னர் சில காலத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசம் மீண்டும் உத்வேகம் அடைந்தது. எனவே பின்னர் மீண்டும் அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், இவர்கள் மிகவும் கடின உழைப்பாளியாக இருந்தார்கள். படிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். பஸரா பல்கலை கழகத்திலிருந்து அன்னார் டிகிரி பெற்றிருந்தார்கள். அங்கு காலேஜ் ஆஃப் பிஸ்னஸ் அன்ட் அட்மினிஸ்டிரேஷன் மற்றும் எகனாமிக்ஸ் கல்வியை பயின்றார்கள். மொழிகள் கற்பதற்கான ஆர்வம் இருந்தது. எனவே அன்னார் ஆங்கில மொழியை நன்றாக கற்றிருந்தார்கள். ஃபிரஞ்சு மொழியையும் கற்றிருந்தார்கள். ஸ்பேனிஷ் பயின்று இருந்தார்கள். ஜெர்மனி கற்றிருந்தார்கள். மேலும் ஓரளவிற்கு ரஷ்யன் மொழியையும் அறிந்திருந்தார்கள்.

2009-ம் ஆண்டு அன்னார் தமது மனைவியுடன் இங்கு யூ.கேவிற்கு இடம் பெயர்ந்துவிட்டார்கள். ஆக, அல்லாஹ் அன்னாருக்கு இங்கு ஒரு மகளையும் வழங்கினான். பிரிட்டன் வந்தடைந்த பிறகு ஃபராஸ் ஸாஹிப் தற்செயலாக MTA அல்அரபியாவைப் பார்த்தார்கள். மேலும், அதில் அவர்களுக்கு தமது கேள்விகளுக்கான விடைகள் கிடைக்கத் துவங்கி விட்டன. இறுதியில் அன்னாரின் உள்ளத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் எந்த அளவிற்கு குடிகொண்டு விட்டது என்றால், பெரும்பாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை புகழ்ந்து எழுதிய கஸீதாக்களை முணுமுணுத்துக் கொண்டு வந்தார்கள். இதற்கிடையில் அன்னார் கனவில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களைக் கண்டார்கள். ஒரு பெரிய மஸ்ஜிதில் அன்னார் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அன்னாருடைய அருளுக்குரிய முகத்திலிருந்து ஒளி வெளியேறிக் கொண்டிருந்தது. பின்னர் அதன் பிறகு ஓர் அழகிய இளைஞரைக் கண்டார்கள். அவர் பத்திரிகை நிருபரைப் போன்று மைக்ரோ ஃபோனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய மிகவும் அழகிய பெயரைக் குறிப்பிட்டவாறு அன்னாரை பின்பற்றும் படி மக்களுக்கு அறிவுறுத்திக் கொண்டிருந்தார். இறுதியில் அன்னார் இதன் அடிப்படையில் 2012-ல் பைஅத் செய்துவிட்டார்கள். ஷீஃபெல்ட் என்ற நகரத்தைச் சேர்ந்த மருத்துவர் பிலால் தாஹிர் ஸாஹிப் அவர்களுடன் அன்னாருக்கு தொடர்பு ஏற்பட்டது. அன்னாரின் மூலமாக இவர்கள் பைஅத் செய்வதற்கான விண்ணப்பத்தை அனுப்பினார்கள். பின்னர் அன்னாருடன் இணைந்து இயக்கத்தின் பல்வேறு நூல்கள் மற்றும் கேள்வி பதில் நிகழ்ச்சியை படித்தார்கள். மேலும், மிகவும் விரைவாக ஜமாஅத்தினுடைய சிந்தனைகள் மற்றும் கொள்கைகளை பிரச்சாரம் செய்வதிலும், ஆட்சேபனைகளுக்கு பதில் கொடுப்பதிலும் ஜமாஅத்தின் தாக்கம் மிகுந்த அறிவார்ந்த தற்காப்புகளை செய்வதிலும் ஈடுபட்டுவிட்டார்கள்.

உர்தன் நாட்டிலிருந்து யஸன் ரபாபஅஃ ஸாஹிப் எழுதுகின்றார்கள்: சகோதரர் ஃபிராஸ் அப்துல் வாஹித் ஸாஹிப் மிகவும் நல்ல அஹ்மதியாக இருந்தார்கள். ஜமாஅத்தினுடைய நூல்களை வாசித்து வந்தார்கள். எதிரிகள் மற்றும் முர்தத்களுக்கு பதில் அளித்து வந்தார்கள். அவர்கள் உண்மையான முறையில் இஸ்லாம் அஹ்மதிய்யத்தை பாதுகாக்கின்ற பணியை செய்யக் கூடியவராக இருந்தார்கள். ஃபேஸ் புக்கில் அன்னாரை ஃபாரிஸே அஹ்மதிய்யத் அதாவது அஹ்மதிய்யத்தின் போர்க் குதிரை என்று அஹ்மதி சகோதரர்கள் கூறிவந்தார்கள். எனது கண்கள் அன்னாரைக் நினைவுகூரும் போது கண்ணீர் வடிக்கின்றன. அல்லாஹ் அன்னாருக்கு பாவமன்னிப்பை வழங்குவானாக.

தமீம் அபூ தகா ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஃபராஸ் ஸாஹிப் அசாதாரண ஆராய்ச்சியாளராகவும், அரபி மற்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்வதிலும், எழுதுவதிலும் மிகச் சிறந்த திறமைகளை படைத்தவராக இருந்தார்கள்.

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஜமாஅத்துடைய வெப்சைட்டில் கேள்விகளுக்கு பதில் அளிக்கக் கூடிய குழுவின் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார்கள். அன்னாருடைய பதில்கள் எப்போதும் முழுமையானதாகவும், சான்றுகளைக் கொண்டதாகவும் இருந்து வந்தன. அவற்றிற்கு உறுதுணையாக அன்னார் ஜமாஅத் மற்றும் ஜமாஅத் அல்லாத அரபி மற்றும் ஆங்கில நூல்களைக் கொண்டு ஆதாரங்களை எடுத்துரைத்து வந்தார்கள். சில அரேபிய முர்தத்கள் மற்றும் நயவஞ்சகர்கள் குழப்பத்தை ஏற்படுத்திய போது மர்ஹூம் ஃபராஸ் ஸாஹிப் அவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் கொடுக்கக் கூடிய மற்றும் அவர்களை எதிர் கொள்ளக்கூடியவர்களின் முதல் வரிசையில் இருந்தார்கள். தமது முழுமையான ஈமான் மற்றும் நேசத்தின் காரணமாக மிகவும் தீவிரமாக ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தை பாதுகாத்து வந்தார்கள்.

டாக்டர் அய்மன் ஓவ்தஹ் ஸாஹிப் கூறுகின்றார்கள்: சகோதரர் மர்ஹூம் ஃபிராஸ் அப்துல் வாஹித் அவர்களை அவர்களுடைய பரந்த அறிவு மற்றும் அசாதாரண புத்திக் கூர்மை, அன்னாரின் கட்டுரைகள் மற்றும் எழுத்துக்களின் அடிப்படையில் குறிப்பாக அறிந்திருந்தார்கள். அன்னார் ஜமாஅத்தில் இணைந்து அதிக காலம் கழிந்திருக்கவில்லை என்றபோதிலும் மிகவும் குறுகிய காலத்தில் ஜமாஅத்தினுடைய சிந்தனைகள் மற்றும் கொள்கைகளைக் குறித்து மிகவும் ஆழமான அறிவை பெற்று தமது தாக்கம் மிகுந்த பதில்களால் எதிரிகளின் வாயை அன்னார் அடைத்து வந்தார்கள். மர்ஹூமிற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் அரபி வெப்சைட்டில் கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனை அன்னார் இறுதி நேரம் வரை மிகவும் சிறப்பாக நிறைவேற்றினார்கள். மிகுந்த ஆர்வத்துடனும், தூய்மையுடனும் பணி செய்தார்கள். கேள்வி பதிலுக்கான அரபி வெப்சைட்டில் பஸாத் அஹ்மதி என்ற தலைப்பில் அன்னாருடைய சுமார் 800 ஆர்டிகல் அல்லது ஆட்சேபனைகளுக்கான பதில்கள் அன்னார் ஆழமான அறிவு படைத்த நபராக இருந்தார்கள் என்பதற்கும், ஜமாஅத்தினுடைய சிந்தனைகள் மற்றும் கொள்கைகளை பரப்புவதற்கும் மற்றும் எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கு பதில் அளிப்பதற்கான அன்னாருடைய ஆர்வத்திற்கும் சான்று பகர்ந்து கொண்டே இருக்கும்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாருடைய மனைவி மற்றும் மகளுக்கும் பாதுகாவலனாக இருப்பானாக. மேலும் பொறுமை மற்றும் தைரியத்தையும் அவர்களுக்கு வழங்குவானாக. அன்னாரின் நல்விருப்பங்களை அன்னாருடைய குடும்பத்தினருக்கு ஆதரவாகவும் ஏற்றுக் கொள்வானாக. துஆக்களை ஒப்புக் கொள்வானாக. மேலும், அல்லாஹ் ஜமாஅத்திற்கும் அன்னாரைப் போன்ற மேலும் சிறந்த மாற்று நபர்களை வழங்குவானாக. தொழுகைக்கு பிறகு இன்ஷா அல்லாஹ் நான் கூறியது போன்று ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன்.

தமிழாக்கம்:
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

இணைந்திருங்கள் என்று அன்னார எவ்வாறு கூறியிருக்க முடியும்?

இங்கே கூறப்பட்டுள்ள அசல் விஷயம் இதுவாகும். அதாவது, கிறிஸ்தவ சமுதாயங்களின் முன்னேற்றத்தின் காலத்தின் போது இஸ்லாத்தில் நிலை பெற்றிருக்கும் ஒரு ஜமாஅத் இருக்கும். மேலும், அதனுடன் இணைந்து கொள்வதற்கு மக்களுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இந்த வசனத்திற்கு நேரடியாக உரியவர்கள் அக்காலத்தில் இஸ்லாத்தின் முன்னேற்றத்தை அரசியல் காரணிகளுடன் தொடர்புடையதாக ஆக்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் ஆவர். இந்த தவறில் மூழ்கிவிடாதீர்கள். மாறாக, காலையிலும், மாலையிலும் தொழுகைகளில் துஆக்கள் செய்து கொண்டிருக்கும் அந்த மக்களுடன் இணைந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். மேலும், அல்லாஹ்வின் அருட்களை துஆக்களின் மூலமாக அழைக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

பின்னர் அல்லாஹ் கூறுகின்றான்: இந்த தொழுகையாளிகளின் ஜமாஅத்திடமிருந்து உங்களது பார்வைகளை அகற்றி வேறு பக்கம் கொண்டு செல்ல வேண்டாம். ஏனெனில், உலகின் அழகு மற்றும் அதன் முன்னேற்றத்திற்கான ஏற்பாடு அவற்றிற்கு வெளியில் கிடைக்கும். ஆனால், அதில் இறைவனின் திருப்தியோ கிடைக்காது. எனவே உலகியல் பேராசைகளின் காரணமாக வெளிப்படையில் சிறியதாக தென்படக் கூடிய இந்த ஜமாஅத்தை ஏளனமாக கருதாதீர்கள். மேலும், இறை தியானம் மற்றும் பிரச்சாரத்திலிருந்து கவனமற்றவர்களாக இருக்கின்ற, தடியின் வலிமையைக் கொண்டு அந்த சமுதாயங்களை நேர்வழிப்படுத்த விரும்புகின்ற, மேலும் வரம்பு மீறுதல் மற்றும் குறைவு செய்தல் ஆகிய நோயிலும், அரசியல் மனயிச்சைகளிலும் மூழ்கிக் கிடக்கின்ற அந்த மக்களை பின்பற்றாதீர்கள்.

இந்த வசனத்தில் இந்த பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது. அதாவது, அக்காலத்தில் முஸ்லிம்களின் துன்பங்களுக்கு மூன்று விஷயங்கள் காரணியாக இருக்கும். ஒன்று, மக்கள் இறை வணக்கத்திலிருந்துது கவனமற்றவர்களாக இருப்பார்கள்; இறை வணக்கத்தின் பக்கம் கவனம் இருக்காது. இரண்டாவது விஷயம் என்னவென்றால், மக்களின் உள்ளங்களில் உலகின் செல்வங்களின் மீதான நேசம் அதிகரித்து விடும். மூன்றாவது விஷயம் என்னவென்றால், உலக சுகபோகங்களின் மீது மிக அதிக அழுத்தம் இருக்கும். அது போன்ற காலத்தில் இறை வணக்கத்தில் மும்முரமாக இருப்பதும், செல்வத்தின் பக்கம் ஆர்வம் செலுத்தாமல் இருப்பதும்,தமது ஆகுமான தேவைகளை நிறைவேற்றி விட்டு செல்வத்தின் எஞ்சிய பகுதியை மார்க்கத்தை பரப்புவதில் செலவிடுவதும் நம்பிக்கையாளருக்கு அவசியமானதாக இருக்கும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 443, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

மார்க்கத்தை அடைவதற்காக இருக்க வேண்டும். எனது இந்தக் கருத்தின் பொருள், மனிதன் உலகத்துடன் எந்த நோக்கத்தையும், தொடர்பையுமே வைக்கக் கூடாது என்பதாகும் என்று எவரும் புரிந்து கொள்ளக் கூடாது. அது எனது கருத்து கிடையாது. மேலும், அல்லாஹ்வும் உலகை சம்பாதிப்பதை தடுக்கவும் இல்லை. மாறாக, இன்னும் கூறப்போனால் இஸ்லாம் துறவறத்தை தடுத்து இருக்கின்றது. அது கோழைகளின் பணியாகும். நம்பிக்கையாளரின் தொடர்புகள் உலகத்துடன் எந்த அளவிற்கு விசாலமானதாக இருக்குமோ அந்த அளவிற்கு அவை உயர் அந்தஸ்தை அடைவதற்கு காரணியாக அமைகின்றன. ஏனெனில், அவரது நோக்கமாக மார்க்கம் இருக்கின்றது. மேலும், உலகம் அதாவது அவரது செல்வமும் சொத்துகளும் மார்க்கத்திற்கு சேவை செய்வதற்காக அமைகின்றது. எனவே அசல் விஷயம் என்னவென்றால் உலகம் உங்களது வாழ்வின் நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக, உலகை பெறுவதன் அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்கு சேவை செய்யும் வகையில் உலகை சம்பாதிக்க வேண்டும். உதாரணமாக, மனிதன் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு செல்வதற்காக பயணத்தில் வாகனம் மற்றும் வழிப்பாதை உணவு ஆகியவற்றை உடன் வைத்துக் கொள்கின்றான். ஆக, அதன் அசல் நோக்கம் இலக்கை சென்றடைய வேண்டும் என்பதாக இருக்கின்றதே தவிர வாகனமும், வழிப் பாதைக்கான உணவும் அவனது நோக்கமாக இருப்பதில்லை. இவ்வாறு மனிதன் உலகத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக என்பதை உணர்ந்து அதனை பெற்றுக் கொள்ள வேண்டும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 494, 2018-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * * * *

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?
உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.
நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.
KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போருக்கு பிறகு நிகழ்ந்த பனூ ஸுலைம் அல்லது கர்கரதுல் குத்ர் போர் உட்பட பல்வேறு சம்பவங்களைக் குறித்த விளக்கம்**

**உமைர் பின் வஹப் அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவம்**

**ஹிஜ்ரத்தின் இரண்டாம் ஆண்டில் ரமலான் மாதத்தின் முடிவில் ஷவ்வால் முதல் தேதியில் அன்னார் (ஸல்) முதலாவது ஈதுல் ஃபித்ரை நிறைவேற்றினார்கள்**

**இணை வைப்பாளர்களும் கூட தங்களது இணை வைத்தலை மார்க்கம் என்றும், ஏக இறை இறை வணக்கத்தை வழிகேடு என்றும் கருதி வந்தனர். இன்றைய நாட்களிலும் இதுவே நிலைமையாகும்**

**அஸ்மாஃ பின்த் மர்வான் என்ற பெண்மணியின் கொலை தொடர்பான அறிவிப்புகளைக் குறித்த உண்மைத்துவம் மற்றும் நபித்துவ நிந்தனைக்காக கொடுக்கப்பட்ட தண்டனை தொடர்பான ஒரு சந்தேகத்திற்குரிய அறிவிப்பைக் குறித்த தெளிவான விளக்கம்**

**நபித்துவ நிந்தனைக்கு எந்த வகையான எந்தவொரு உலகத் தண்டனையும் இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தில் இடம் பெறவுமில்லை. அதேபோன்று அது தொடர்பான இந்த சம்பவத்தில் எந்த உண்மைத்துவமும் இல்லை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 செப்டம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தபூக்** மாதம் **29 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர் போருக்கு பிறகு நிகழ்ந்த சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த சம்பவங்களின் மூலம் வரலாற்றை படிக்கும்போது எங்கு நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் வாழ்வின் சம்பவங்களைக் குறித்தும் தெரிய வருகின்றதோ அங்கு சில வரலாற்று விஷயங்களும் தெரிய வருகின்றன. மேலும், சில தவறான அறிவிப்புகளும் அடையாளம் காணப்படுகின்றன. அந்த அறிவிப்புகள் இஸ்லாத்தைக் குறித்த தவறான சித்திரத்தை அந்நியர்களுக்கு முன்னால் எடுத்து வைத்துள்ளன. இஸ்லாத்தின் எதிரிகள் அவற்றைக் கொண்டு இஸ்லாத்தை இழிவுபடுத்துவதற்காக பயன்படுத்துகின்றனர். மேலும் தீவிரவாதத்தை விரும்புகின்ற முஸ்லிம்கள் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

எவ்வாறு இருப்பினும், இன்று நான் எந்த சம்பவங்களை எடுத்துரைக்க இருக்கின்றேனோ அவற்றில் முதலாவது சம்பவம் உமைர் பின் வஹப் அவர்களுடையதாகும். அன்னார் போருக்குப் பிறகு தமது தோல்வி மற்றும் இணை வைப்பாளர்களுக்கு கிடைத்திருந்த தோல்வி ஆகியவற்றிற்கு பழிவாங்கும் விதமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக மக்காவிலிருந்து மதீனாவிற்கு சென்றிருந்தார்கள். ஆனால், அங்கு அல்லாஹ்வின் நியதி வேறு சில பணியை செய்தது. மேலும், அன்னாருக்கு இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான நற்பேறு வழங்கியது.

அதன் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது: அதாவது பத்ர் போர்க் கைதிகளில் வஹப் பின் உமைரும் ஒருவராக இருந்தார். அவர் பின்னர் முஸ்லிமாகிவிட்டார். அவரை ரஃபாஅஃ பின் ராஃபிஃ அவர்கள் கைது செய்திருந்தார்கள். அவரது தந்தை உமைர் அதாவது உமைர் பின் வஹப் குறைஷியர்களின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். அவர் மக்காவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கும் அன்னாரின் ஸஹாபிகளுக்கும் மிகவும் அதிகமான துன்பங்களை இழைத்திருந்தார். ஆனால், பின்னர் பத்ர் போருக்கு பிறகு முஸ்லிமாகிவிட்டார். அதன் விளக்கம் இவ்வாறாகும்: அதாவது முஸ்லிம் ஆகுவதற்கு முன்னர் உமைர் மற்றும் ஸஃப்வான் பின் உமைய்யா ஆகியோர் ஒருநாள் மக்காவில் ஹதீமிற்கு அருகில் அமர்ந்திருந்தனர். ஸஃப்வான் அப்போது முஸ்லிமாகியிருக்கவில்லை. இந்த இருவரும் பத்ர் போரில் தங்களுக்கு கிடைத்த தோல்வியைக் குறித்தும், அந்தப் போரில் கொலை செய்யப்பட்டிருந்த பெரும் பெரும் தலைவர்களைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தனர். இறைவன் மீது ஆணையாக! இந்த தலைவர்கள் கொலையுண்ட பிறகு உயிர் வாழ்வதற்கான இன்பமே முடிந்து விட்டது என்று ஸஃப்வான் கூறினார். அதற்கு, நீ உண்மையே கூறுகின்றாய்; என் மீது ஒரு நபருடைய கடன் இல்லாமல் இருந்திருந்தால்;அதனை திருப்பி செலுத்துவதற்கு என்னிடம் எந்த ஏற்பாடும் இல்லாமல் இருக்கின்றது, மேலும் எனக்கு பிறகு எனது மனைவி, பிள்ளைகளின் பிரச்சனைகளைக் குறித்த எண்ணம் இல்லாம் இருந்திருந்தால் (அதாவது அவர்கள் எனக்கு பிறகு வறுமைக்கு ஆளாகிவிடக் கூடும் என்ற எண்ணம் இல்லாமல் இருந்தால்) பின்னர் நான் முஹம்மது (ஸல்) அவர்களை சென்றடைந்து அவரை கொலை செய்திருப்பேன்;ஏனெனில், நான் அங்கு சென்றடைவதற்கான காரணமும் உள்ளது. அதாவது எனது மகன் அவர்களுடைய கட்டுப்பாட்டில் கைதியாக இருக்கின்றான் என்று உமைர் கூறினார். இதைக் கேட்ட உடனயே உமைருடைய கடனிற்கான பொறுப்பை ஸஃப்வான் எடுத்துக் கொண்டார். மேலும், நான் உனது கடனிற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன்;நான் அதனை செலுத்தி விடுவேன்;மேலும்,உனது மனைவி, பிள்ளைகள் எனது மனைவி பிள்ளைகளுடன் இருப்பார்கள். அவர்கள் உயிருடன் இருக்கும் வரை அவர்களின் பராமரிப்பிற்கான பொறுப்பை நான் எடுத்துக் கொள்கின்றேன். நீ செல்! சென்று,நவூதுபில்லாஹ்! முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்து விடு என்று ஸஃப்வான் கூறினார். இதைக் கேட்ட உடனேயே உமைர் செல்வதற்கு தயாராகிவிட்டார். எனக்கும் உனக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த உடன்படிக்கையை இரகசியமாக வைக்க வேண்டும் என்று அவர் ஸஃப்வானிடம் கூறினார். ஸஃப்வான் வாக்குறுதி கொடுத்துவிட்டார். அப்போது உமைர் (தனது) வீட்டிற்குச் சென்று தனது வாளை எடுத்து அதில் விஷத்தைத் தடவிக் கொண்டார். மேலும் அதன் பிறகு மக்காவிலிருந்து புறப்பட்டு மதீனாவை சென்றடைந்தார்.

உமைர் மஸ்ஜித் நபவியை அடைந்தபோது அங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்ற சில முஸ்லிம்களுடன் அமர்ந்திருந்தார்கள். மேலும், பத்ர் போரின் விஷயங்களை பேசிக் கொண்டிருந்தார்கள். மஸ்ஜித் நபவியின் வாசலில் தனது ஒட்டகத்தை உமைர் அமரச் செய்தார். அப்போது, உமைர் கைகளில் வாளை ஏந்திக் கொண்டு இறங்கிக் கொண்டிருப்பதன் மீது உமர் (ரலி) அவர்களின் பார்வை பட்டது. இறைவனின் எதிரியான உமைர் பின் வஹப் நிச்சயமாக ஏதோ தீய எண்ணத்துடன் இங்கு வந்துள்ளார் என்பதை அவரைக் கண்டதுமே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாகவே அங்கிருந்து எழுந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அன்னாருடைய அருளுக்குரிய அறைக்கு சென்றார்கள். மேலும், இறைவனின் தூதர்(ஸல்) அவர்களே! உமைர் பின் வஹப் வாளை ஏந்திக் கொண்டு வந்துள்ளார் என்று கூறினார்கள். அதற்கு, அவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று அன்னார்(ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்

நேராக உமைரிடம் சென்றார்கள். மேலும், அவரது கழுத்தில் இருந்த வாளின் உறையை உறுதியாகப் பற்றிப் பிடித்தவாறு உமைரை அழைத்துக் கொண்டு சென்றார்கள். என்னுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் (அறையின்) உள்ளே செல்லுங்கள்; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலேயே அமருங்கள்; ஏனெனில் இவரைக் குறித்து எனக்கு மனநிறைவு இல்லை என்று அந்த நேரத்தில் தம்முடன் இருந்த அன்ஸாரி முஸ்லிம்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உள்ளே சென்றார்கள். உமைரின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த வாளின் உறையை தமது கரங்களால் உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்த நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்து கொண்டிருப்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்தபோது, உமரே! அவரை விட்டுவிடும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், உமைரே அருகில் வாரும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே உமைர் அருகில் சென்றார். மேலும், அவர் அறியுரமைக் காலத்தின் மரியாதைக்கேற்ப أَنْعِمُوْا صَبَاحًا என்று கூறியவாறு ஸலாம் கூறினார். அப்போது, உமைரே! இஸ்லாம் எங்களுக்கு உமது இந்த ஸலாத்தை விட சிறந்த ஸலாமை எங்களுக்கு வழங்கியுள்ளது; அது சொர்க்கத்திற்கான ஸலாம் ஆகும். நீர் எதற்காக வந்துள்ளீர்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, நான் எனது அந்த கைதியைக் குறித்து அதாவது தங்களது கட்டுப்பாட்டில் இருக்கும் எனது மகனைக் குறித்து பேசுவதற்காக வந்துள்ளேன்; மேலும், அவர் தொடர்பாக நீங்கள் நல்லமுறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பது எனது விண்ணப்பம் ஆகும் என்று உமைர் கூறினார். அவரது உருவிய வாளைப் பார்த்துவிட்டு, அப்படியென்றால் இந்த வாளிற்கு என்ன பொருள்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது, இறைவன் இந்த வாளை நாசமாக்குவானாக! தாங்கள் எங்களை எதற்கும் தகுதியானவர்களாகவா விட்டு வைத்துள்ளீர்கள்? இந்த வாள் இதற்கு முன்னர் எப்போது எங்களுக்கு ஆதரவாக எங்கே இருந்தது? என்று உமைர் கூறினார். நீர் எந்த நோக்கத்துடன் இங்கு வந்தள்ளீர்? எனக்கு உண்மையை சரியாகக் கூறிவிடும்! என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அவருடைய அந்த பதிலை அன்னார் (ஸல்) நம்பவில்லை. உண்மையில் எனது கைதி தொடர்பாக தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற இந்த எண்ணத்தை தவிர்த்து வேறு எந்த எண்ணத்துடனும் நான் வரவில்லை என்று உமைர் கூறினார்.

அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: இல்லை ; மாறாக, ஒருநாள் நீயும், ஸஃப்வான் பின் உமைய்யாவும் ஹதீமிற்கு அருகில் அமர்ந்திருந்தீர்கள். மேலும் பத்ர் போரில் கொலை செய்யப்பட்டு குழிகளில் வீசப்பட்ட குறைஷிகளின் கொலை செய்யப்பட்டவர்களைக் குறித்து நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள். அப்போது, என் மீது ஒரு கடன் இல்லாமல் இருந்திருந்தால் மேலும் எனது மனைவி, பிள்ளைகளைப் பற்றிய கவலை எனக்கு இல்லாமல் இருந்திருந்தால் பின்னர் நான் சென்று முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்திருப்பேன் என்று நீர் ஸஃப்வானிடம் கூறினீர். என்னை கொலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் ஸஃப்வான் உமது கடனை அடைப்பதற்கான பொறுப்பையும், மேலும் உனது மனைவி, பிள்ளைகளின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தான்.

இவ்வாறு நிகழ்ந்தது என்று இந்த அனைத்து விஷயங்களையும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்க அல்லாஹ் அறிவித்துக் கொடுத்துவிட்டான்.இந்த அறிவிப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இதனைக் கேட்டபோது, உமைர் உடனடியாக இவ்வாறு கூறினார்:

தாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்று நான் சாட்சியம் பகர்கின்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! விண்ணிலிருந்து தங்களுக்கு வந்த செய்திகளையும், மேலும், தங்கள் மீது இறங்கி வந்த வஹீகளையும் நாங்கள் நிராகரித்துக் கொண்டிருந்தோம். மேலும், இந்த விவகாரத்தைப் பொறுத்த வரை அந்த நேரத்தில் ஹதீமிற்கு அருகில் என்னையும், ஸஃப்வானையும் தவிர வேறு ஒரு மூன்றாம் நபர் இருந்திருக்கவில்லை. மேலும், வேறு எவருமே எங்களுடைய அந்த உரையாடலை அறிந்திருக்கவில்லை. எனவே இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவர் அதனைக் குறித்த செய்தியை (தங்களுக்கு) வழங்கயிருக்க முடியாது. எனவே அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் உரியது. அவனே இஸ்லாத்தின் பக்கம் எங்களுக்கு வழிகாட்டினான். மேலும், எனக்கு இந்த வழியில் நடப்பதற்கு நற்பேறு வழங்கியுள்ளான். இதன் பிறகு, உமைர் ஷஹாதத் கலிமாவை ஓதினார்.

பின்னர், உங்களது சகோதரருக்கு மார்க்கக் கல்வியை வழங்குங்கள்; மேலும், அவருக்கு பரிசுத்த திருக்குர்ஆனை கற்பித்துக் கொடுங்கள்; மேலும், அவரது கைதியை விடுதலை செய்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் கூறினார்கள். ஸஹாபிகள் உடனடியாகவே அந்தக் கட்டளையை செயல்படுத்தினார்கள்.

பின்னர், ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எப்போதும் அல்லாஹ்வின் ஒளியை அணைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன்; மேலும், அல்லாஹ்வின் மார்க்கத்தை ஒப்புக் கொண்டிருந்த மக்களுக்கு நான் கடுமையான துன்பங்களை இழைத்து வந்தேன்; எனவே நான் தற்போது இதனை விரும்புகின்றேன். அதாவது, அங்கு மக்கா வாசிகளை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்காகவும், இஸ்லாத்திற்கான அழைப்பை விடுப்பதற்காகவும் நான் மக்கா செல்வதற்கு தாங்கள் எனக்கு அனுமதி நல்குவதை நான் விரும்புகின்றேன். அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழி வழங்கிவிடுவது சாத்தியமானதாகும். இல்லையென்றால் பின்னர், நான் இஸ்லாத்தின் காரணமாக தங்களுடைய தோழர்களுக்கு துன்பங்களை இழைத்து வந்ததைப் போன்று அந்த மக்களுடைய சிலை வணக்கத்தின் அடிப்படையில் நான் அவர்களுக்கு துன்பங்களை இழைத்து வருவேன்.

மக்காவிற்கு செல்வதற்கு அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி நல்கிவிட்டார்கள். துன்பங்களை இழைப்பதற்கு அல்ல ; மாறாக, தப்லீஃக் செய்வதற்காக (அனுமதி நல்கினார்கள்). ஆக, அன்னார் மக்காவிற்கு திரும்பிச் சென்றார்கள். மேலும், அன்னாரின் மகனான வஹப் பின் உமைர் அவர்களும் முஸ்லிமாகிவிட்டார்கள்.

ஒருபுறம் உமைர் மக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்ட பிறகு, மிக விரைவில் நிகழ இருக்கின்ற ஒரு சம்பவத்தைக் குறித்த நற்செய்தியை நான் உங்களுக்கு வழங்குகின்றேன்; அதன் விளைவாக நீங்கள் பத்ர் போர் விபத்துகளையும், துன்பங்களையும் மறந்து விடுவீர்கள் என்று மக்களிடம் ஸஃப்வான் கூறிக் கொண்டிருந்தார். மேலும், வரக் கூடிய ஒவ்வொரு சவாரிகளிடமும் உமைருடைய நடவடிக்கைகளைக் குறித்து விசாரித்துக் கொண்டிருந்தார். இறுதியில், ஒரு சவாரி மக்காவை வந்தடைந்தது. மேலும், உமைர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார் என்று அவர் ஸஃப்வானிடம் கூறினார். அப்போது நான் ஒருபோதும் அவரிடம் பேசவும் மாட்டேன்; மேலும், ஒருபோதும் அவருக்கு எந்த நன்மையும் செய்யவும் மாட்டேன் என்று ஸஃப்வான் சத்தியம் செய்தார். அதன் பிறகு, உமைர் மக்காவை வந்தடைந்தபோது அப்போது அன்னார் முஸ்லிமாகியிருந்தார்கள். எனவே அன்னார் முதலில் ஸஃப்வானின் வீட்டிற்கு செல்லவில்லை.மாறாக, அன்னார் நேராக தமது வீட்டிற்கு சென்றார்கள். அங்கு அன்னார் தமது குடும்பத்தினர் முன்னிலையில் தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை அறிவிப்பு செய்தார்கள். மேலும், முஸ்லிம் ஆகிவிடும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். ஸஃப்வானிற்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது, அவர் ஏன் முதலில் என்னிடத்தில் வருவதற்கு பகரமாக தமது வீட்டிற்கு சென்றார் என்பதை நான் முன்னரே புரிந்து கொண்டிருந்தேன்; அவர் மார்க்கமற்றவராகவும், வழிதவறியவராகவும் ஆகிவிட்டார். நான் இனி அவரிடம் பேசவும் மாட்டேன்; மேலும், அவரது வீட்டினருக்கு என்னிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவும் செய்யாது என்று ஸஃப்வான் கூறினார்.

இணை வைப்பாளர்கள் தமது இணை வைத்தலை மார்க்கமாகவும், ஏக இறை வணக்கத்தை வழிகேடாகவும் கருதியிருந்தனர். இன்றைய நாட்களிலும் இதே நிலை தான் உள்ளது. அதன் பிறகு உமைர் ஸஃப்வான் பின் உமைய்யாவிடம் சென்றடைந்தார். மேலும், அவரை விளித்து இவ்வாறு கூறினார்:

நீர் எங்களது தலைவர்களில் ஒரு தலைவர் ஆவீர்; நாம் கற்களை வணங்கியும், அவற்றிற்காக குர்பானிகளும் கொடுத்து வந்தோம் என்பதை நீர் அறிவீர். இதுவும் ஒரு மார்க்கமா? அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் கூறுகின்றேன்.

ஆனால், ஸஃப்வான் உமைருடைய விஷயத்திற்கு எந்த பதிலும் கொடுக்கவுமில்லை ; அவரது பக்கம் கவனம் செலுத்தவுமில்லை. (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 268- 270, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்,2002-ம் ஆண்டு)

இந்த சம்பவத்தைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அப்போதுவரை வெளிப்படையான வலிமை மற்றும் ஆணவத்தில் மட்டுமே சண்டையிட்டுக் கொண்டிருந்த மக்கத்து காஃபிர்கள் ஒரு திறந்த மைதானத்தில் முஸ்லிம்களிடம் தோல்வியடைந்துவிட்டபோது அவர்கள் மறைமுகமாகவும், திரைக்குப் பின்னாலும் சதித் திட்டங்களை தீட்டுவதில் ஈடுபட்டிருந்தார்கள். ஆக, பத்ர் போர் முடிந்து சில நாட்களுக்கு பிறகு நடைபெற்றிருந்த இந்த வரலாற்று சம்பங்கள் அப்போது நிலவிய அந்த அபாயங்களுக்கு ஒரு தெள்ளத் தெளிவான உதாரணமாகும்.

எழுதப்பட்டுள்ளது: பத்ர் போர் முடிந்த சில நாட்களுக்கு பிறகு குறைஷியர்களில் செல்வாக்கு படைத்த உமைர் பின் வஹப் மற்றும் ஸஃப்வான் பின் உமைய்யா பின் கலஃப் ஆகியோர் கஃபாவின் முற்றத்தில் அமர்ந்து கொண்டு பத்ர போரில் கொலையுண்டவர்களுக்காக ஒப்பாறி வைத்துக் கொண்டிருந்தனர்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அதே விஷயங்களை அன்னார் (ரலி) இங்கு எழுதியுள்ளார்கள்: அவர்கள் இந்த விஷயங்களை பேசிக் கொண்டிருந்தனர். மேலும், தற்போது உயிர் வாழவே பிடிக்கவில்லை என்று அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். நானோ உயிரை ஆபத்தில் போடுவதற்கும் தயாராக இருக்கின்றேன்; ஆனால், எனது கடன் என்னை தடுக்கின்றது. இல்லையென்றால், நவூதுபில்லாஹ் அங்கு சென்று நான் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களை கொலை செய்துவிடுவேன் என்று உமைர் கூறினார். எவ்வாறு இருப்பினும், அதன் பிறகு ஏற்கனவே கூறப்பட்டது போன்று ஸஃப்வான் கடனை அடைப்பது மற்றும் பிள்ளைகளை பராமரிப்பது ஆகியவை தொடர்பாக வாக்குறுதி செய்தார்.

இதன் பிறகு அன்னார் (ரலி) இங்கு இதனையும் எழுதியுள்ளார்கள்:

எவ்வாறு இருப்பினும் இதன் பிறகு உமைர் தனது வீட்டிற்கு சென்றார். வாளைத் தீட்டிக் கொண்டு மக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்றார். மதீனாவை சென்றடைந்தார். அப்போது இந்த விவகாரங்களில் மிகவும் புத்திக் கூர்மை வாய்ந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரைக் கண்டு அச்சமடைந்தார்கள். மேலும், உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, உமைர் வந்துள்ளார்; மேலும், அவரைக் குறித்து எனக்கு மனநிறைவு இல்லை என்று கூறினார்கள். அவரை என்னிடத்தில் அழைத்து வாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவரை அழைத்து வருவதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உமைரை சந்திக்க வைப்பதற்காக நான் அவரை அழைத்து வருகின்றேன்; எனக்கு அவரது நிலையைக் குறித்து சந்தேகம் உள்ளது. நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று அமர்ந்து கொள்ளுங்கள்; மேலும் எச்சரிக்கையாக இருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செல்லும் வழியில் ஸஹாபிகளிடம் கூறிச் சென்றார்கள். அதன் பிறகு உமைரை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அன்னார் (ஸல்) மென்மையுடன் அவரை தமக்கு அருகில் அமர வைத்து அவரிடம் விசாரித்தார்கள். உமைரே!என்ன விஷயம்? எவ்வாறு வர நேர்ந்தது? என்று கேட்டார்கள். அதற்கு எனது மகன் தங்களின் கட்டுப்பாட்டில் கைதியாக இருக்கின்றான்; அவனை விடுவித்துச் செல்வதற்காக வந்துள்ளேன் என்று உமைர் கூறினார். பின்னர், அப்படியென்றால் இந்த வாளை ஏன் வைத்துள்ளீர்? அதை ஏன் கழுத்தில் தொங்க விட்டுள்ளீர்?என்று கேட்டார்கள். அதற்கு, தாங்கள் வாளைப் பற்றி கேட்கின்றீர்களா? பத்ர் போரில் இந்த வாள்கள் என்ன பணி செய்தன? மிகவும் புத்திசாலித்தனமாக பேசிக் கொண்டிருந்தார். இல்லை! நீர் ஏன் வந்துள்ளீர்? என்று உண்மையை கூறிவிடு! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். ஆனால் அவர் அதே விஷயத்தையே கூறினார். விஷயம் அதே தான். நான் ஏற்கனவே கூறிவிட்டது போன்று மகனை விடுவிப்பதற்காக வந்துள்ளேன் என்றே அவர் கூறினார்.

சரி! அப்படியென்றால் பின்னர் நீர் ஸஃப்வானுடன் இணைந்து கஅபாவின் முற்றத்தில் எந்த சதித் திட்டமும் தீட்டவில்லையா? என்று அன்னார்(ஸல்) கேட்டார்கள். அன்னார் (ஸல்) அந்த சதித் திட்டத்தைக் குறித்து சைகை செய்தார்கள். உமைர் இந்த விஷயத்தைக் கேட்டு திகைத்துபோய் விட்டார். ஆயினும், வெளிக்காட்டாதபடி பேசினார். இல்லை! நான் எந்த சதித் திட்டமும் செய்யவில்லை என்று கூறினார். நீர் என்னை கொலை செய்வதற்கான திட்டத்தை தீட்டவில்லையா? ஆனால், நினைவிற் கொள்! நீர் என்னை (கொலை நோக்கத்துடன்) நெருங்குவதற்கு இறைவன் உனக்கு வாய்ப்பு வழங்க மாட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உமைர் ஓர் ஆழமான சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். பின்னர், தாங்கள் கூறுவது உண்மைதான்; நாங்கள் உண்மையிலேயே இந்த சதித் திட்டத்தை தீட்டினோம். ஆனால், இறைவன் தங்களுடன் இருக்கின்றான் என்று தெரிகின்றது. அவன் எங்களது எண்ணங்களை குறித்து தங்களுக்கு தகவல் கொடுத்துவிட்டான். அவ்வாறில்லையென்றால் எந்த நேரத்தில் நானும், ஸஃப்வானும் பேசிக் கொண்டிருந்தோமோ அந்நேரத்தில் அங்கு வேறு எந்த மூன்றாம் நபரும் இருந்திருக்கவில்லை. அநேகமாக நான் ஈமான் கொள்வதற்காகவே இறைவன் இந்த திட்டத்தை வகுக்கச் செய்துள்ளான். மேலும், நான் உண்மையான உள்ளத்துடன் தங்கள் மீது ஈமான் கொள்கின்றேன் என்று உமைர் கூறினார்.

உமைர் இஸ்லாத்தை தழுவியதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், ஸஹாபிகளிடம் கூறினார்கள்: இனி இவர் உங்களது சகோதரர் ஆவார். இவருக்கு இஸ்லாத்தின் போதனைகளை தெரியப்படுத்துங்கள். மேலும், இவரது கைதியை விடுவித்து விடுங்கள்.

சுருக்கமாக, உமைர் பின் வஹப் முஸ்லிமாகிவிட்டார்கள். மேலும், மிக விரைவாக அன்னார் ஈமானிலும், தூய்மையிலும் முன்னேற்றம் கண்டு விட்டார்கள். இறுதியில் உண்மையின் ஒளியால் எந்த அளவிற்கு ஈர்க்கப்பட்டார்கள் என்றால் அன்னார் (ரலி) மீண்டும், மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்த விஷயத்தை வேண்டிக் கொண்டிருந்தார்கள். அதாவது,நான் மக்காவிற்கு சென்று மக்களுக்கு தப்லீஃக் செய்வதற்காக எனக்கு அங்கு செல்வதற்கு அனுமதி நல்குங்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி நல்கிவிட்டார்கள். மேலும், உமைர் மக்காவை சென்றடைந்து தமது தப்லீஃகின் உத்வேகத்தால் இரகசியமாக பல மக்களை முஸ்லிம்களாக்கிவிட்டார்கள். ஆனால், இரவும் பகலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொலையுண்ட தகவலை மக்களுக்கு கூறுவதற்காக காத்துக் கொண்டிருந்த மற்றும் இனி நீங்கள் ஒரு நற்செய்தியை கேட்பதற்கு தயாராக இருங்கள் என்று குறைஷியர்களிடம் கூறிக் கொண்டிருந்த ஸஃப்வான் இந்தக் காட்சியைக் கண்டதும் பேதலித்துபோய் விட்டான். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 374- 376)

பத்ர் போருக்கு பிறகு சில மக்கள் முஸ்லிம்களாகவும் ஆகியிருந்தனர். எனினும், நயவஞ்சகப் பண்பைக் கொண்டிருந்தனர். அவர்களில் அப்துல்லாஹ் பின் அபீ பின் ஸுலூலும் ஒருவனாக இருந்தான்.

அல்லாமா இப்ன் கஸீர் அவர்கள் சூரா பக்ராவின் வசனம் 9,10-ன் விளக்கவுரையில் எழுதுகின்றார்கள்:

பத்ர் போரின் சம்பவங்கள் நிகழ்ந்தபோது அல்லாஹ் தனது கலிமாவை மேலோங்கச் செய்தான். மேலும், இஸ்லாமியர்களுக்கு கண்ணியம் வழங்கினான். அப்போது அப்துல்லாஹ் பின் அபீ ஸுலூல் மதீனாவின் தலைவனாக இருந்தான். மேலும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். மேலும் அறியாமைக் காலத்தில் அந்த இரண்டு கோத்திரங்களுக்கும் அதாவது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவனாக இருந்தான். அந்நிலையில் அவன் அவர்கள் மீது ஆட்சி புரிவான் என்று அந்த மக்கள் எண்ணம் கொண்டிருந்தனர். அதாவது அப்துல்லாஹ் பின் அபீ ஸுலூலை தமது தலைவராக ஆக்கிக் கொண்டிருந்தனர்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: அவனது சமுதாயம் மகுடத்தை உருாக்கி அவனை அரசனாக்குகின்ற ஆயத்தங்களில் மும்முரமாக இருந்தது. இதற்கிடையில், (அவனுக்கு) துன்பம் வந்தடைந்துவிட்டது. அதாவது, இஸ்லாத்தின் தூதுச் செய்தி வந்தடைந்துவிட்டது. மேலும், மக்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். மேலும், அவனை மறந்து விட்டனர். இதன் காரணமாக இஸ்லாம் மற்றும் இஸ்லாமியர்கள் அவனது உள்ளத்தை பதற செய்துக் கொண்டிருந்தனர். பத்ர் போர் சம்பவம் நிகழ்ந்தபோது இந்த விவகாரம் தற்போது மேலோங்கிக் கொண்டு இருக்கின்றதே என்று அவன் கூறத் தொடங்கினான். கொஞ்சம் நபர்களே உள்ளனர் என்பதே அவனது முந்தைய எண்ணமாக இருந்தது. பத்ர் போரில் வெற்றி அடைந்தபோது அதனால் அவனுக்கு அச்சம் உருவானது. எனவே அவன் வெளிப்படையில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டான்.மேலும், அவனது அடிச்சுவட்டைப் பின்பற்றியவாறு அவனது சீடர்களின் ஒரு கூட்டமும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டது. மேலும், வேதம் வழங்கப்பட்ட மக்களில் சிலரும் அவனுடன் இருந்தனர். (தஃப்ஸீர் இபனு கஸீர், தொகுதி1, பக்கம் 87, தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத்-1998-ம் ஆண்டு)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

மதீனாவில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் இன்னும் இணை வைத்தலில் நிலை பெற்றிருந்தனர். பத்ர் போர் வெற்றி அவர்களிடம் ஒரு உந்துதலை உருவாக்கியது. மேலும், அவர்களில் ஏராளமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்த மகத்துவ மிக்க மற்றும் அசாதாரண வெற்றியைக் கண்டு இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். மேலும், அதன் பிறகு மதீனாவிலிருந்து சிலை வணக்கத்தின் ஆதிக்கம் அதிவேகமாக குறையத் துவங்கிவிட்டது. ஆயினும், வேறு சிலரும் இருந்தனர். அவர்களின் உள்ளங்களில் இருந்து இஸ்லாத்தின் அந்த வெற்றி பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் தீப்பொறியை பற்ற வைத்தது. மேலும், அவர்கள் வெளிப்படையான எதிர்ப்பு பயனளிக்காது என்று கருதியவாறு வெளிப்படையில் அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தனர்.எனினும்,உள்ளுக்குள்ளேயே அதன் சுரண்டலில் ஈடுபட்டுக் கொண்டு நயவஞ்சகக் கூட்டத்தில் அவர்கள் இணைந்து விட்டனர். கடைசியாக குறிப்பிடப்பட்ட மக்களில் மிகவும் தனித்தன்மை வாய்ந்தவன் அப்துல்லாஹ் பின் அபீ ஸுலூல் ஆவான். அவன் கஸ்ரஜ் கோத்திரத்தின் மிகவும் பிரபலமான ஒரு தலைவனாக இருந்தான். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்ததன் காரணமாக தனது தலைமைத்துவப் பதவி பறிக்கப்பட்டதன் துக்கத்தில் இருந்தான். இந்த நபர் பத்ர் போருக்கு பிறகு வெளிப்படையில் முஸ்லிமாகிவிட்டான். ஆனால், அவனது உள்ளம் இஸ்லாத்திற்கு எதிராக பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியால் நிறைந்திருந்தது. மேலும், நயவஞ்சகக் கூட்டத்தின் தலைவனாக மாறி, இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக இரகசியமாக குழப்பம் விளைவிக்கும் தொடரை துவங்கிவிட்டான். ஆக, இந்த நபர் சிலமுறை இஸ்லாத்திற்கு மிகவும் அபாயகரமான நிலைமையை உருவாக்குவதில் எவ்வாறு காரணியாக இருந்தார்? என்பது பின்னர் நிகழ்ந்த சில சம்பவங்களிலிருந்து தெரிய வரும். ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 376-377)

பனூ ஸுலைம் அல்லது கர்கரதுல் குத்ர் போர்:

பனூ ஸுலைம் மற்றும் பனூ கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் கர்கரதுல் குத்ர் என்ற இடத்தில் ஒன்று கூடியுள்ளனர்; மேலும், மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்கு திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பத்ர் போரிலிருந்து திரும்பி வந்தபோது சில நாட்களிலேயே அன்னாருக்கு கிடைத்திருந்தது. கர்கரதுல் குத்ர் என்பது ஒரு பொட்டல் மைதானத்தில் இருந்த ஒரு நீரூற்றின் பெயராகும். இது நஜ்த் வழியாக மக்காவிலிருந்து சிரியாவிற்கு செல்லக் கூடிய நெடுஞ்சாலையில் மதீனாவிலிருந்து 96 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

எவ்வாறு இருப்பினும், இந்த தகவல் கிடைத்ததுமே பனூ ஸுலைம் மற்றும் பனூ கத்ஃபான் கோத்திரத்தை நோக்கி சுயமே நேரடியாக முன்னேறிச் சென்று அவர்களின் தீய எண்ணங்களை மண்ணாக்கி விட வேண்டும் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் முடிவெடுத்தார்கள். எனவே அன்னார் (ஸல்) முந்நூறு ஸஹாபிகளைக் கொண்ட படையை அழைத்துக் கொண்டு தாமே.கர்கரதுல் குத்ரை என்ற இடத்தை நோக்கி புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

போருக்காக புறப்பட்டது தொடர்பாக பல்வேறு கருத்துகள் உள்ளன. இப்னு இஸ்ஹாக் அவர்களின் கூற்றின்படி இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பத்ர் போரிலிருந்து திரும்பி வந்து ஏழு நாட்கள் கழித்து ரமலானின் இறுதியில் அல்லது ஷவ்வாலின் துவக்கத்தில் ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டில் இந்த திட்டத்திற்காக புறப்பட்டுச்

சென்றார்கள். தப்காத் இப்னு ஸஃதில் எழுதப்பட்டுள்ளது: பனூ ஸுலைம் போர் ஜமாதில் அவ்வல் ஆறாம் நாள் நடைபெற்றது. வாகிதீயின் கூற்றின்படி இந்தப் போர் ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டில் முஹர்ரம் மாதத்தின் நடுவில் நடைபெற்றது. வாகீதீயின் அறிவிப்புகள் பெரும்பாலும் பலவீனமானவையாகவே இருக்கின்றன. இந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே தலைமை வகித்திருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஏந்தியிருந்தார்கள். மேலும், இஸ்லாமியக் கொடியின் நிறம் வெண்மையாக இருந்தது. (ஸீரத் அல்ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 281, பனூஸுலைம் போர்,தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூ-2002-ம் ஆண்டு)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வராவில் அப்துல்லாஹ் இப்னு உம்மே மக்தூம்(ரலி) அவர்களை தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஸிபாஃ பின் உர்ஃபதா கிஃப்பாரி (ரலி) அவர்களை மதீனாவில் தமது பிரதிநிதியாக நியமித்திருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், நிர்வாக முடிவுகளுக்காக ஹஸ்ரத் ஸிபாஃ (ரலி) அவர்களிடம் பிரதிநிதித்துவம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உம்மே மக்தூம்(ரலி) அவர்களை வழக்கம்போல தொழுகை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்று இந்த விஷயங்களுக்கும் விளக்கமளிக்கப்படுகின்றது. (ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 280, பனூ ஸுலைம் போர், தாருல் குதுபில் இல்மியா-பெய்ரூத்,2002-ம் ஆண்டு)

எவ்வாறு இருப்பினும், இஸ்லாமியப் படை வந்து கொண்டிருக்கின்றது என்று எதிரிகளுக்கு தெரிய வந்தபோது பனூ ஸுலைம் மற்றும் பனூ கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த மக்களுக்கு முந்நூறு நபர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் என்ற இந்த செய்தி திடீரென்று கிடைத்தது. ஆக, அவர்களுக்கு இது முற்றிலும் எதிர்பார்த்திராத ஒன்றாக இருந்தது. அச்சமடைந்து அந்த மக்கள் அங்கிருந்து ஓடி விட்டனர். மேலும் மலைகளின் சிகரகங்களுக்கு மேலே சென்றடைந்துவிட்டனர்.(அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 2, பக்கம் 26, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட பனூஸுலைம் போர், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்,1990-ம் ஆண்டு)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் படையுடன் குத்ர் பள்ளத்தாக்கை சென்றடைந்தார்கள். அப்போது அன்னாருக்கு ஒட்டகங்களின் கால்தடங்களின் அடையாளங்கள் மட்டுமின்றி தண்ணீர் தடாகமும் தென்பட்டது. ஆயினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்தப் பகுதியில் எதிரிகளில் ஒரு நபர் கூட கிடைக்கவில்லை. (கிதாபுல் மகாஸி லில் வாகிதீ, தொகுதி 1, பக்கம் 182, கராரத்துல் குத்ர்.ஆலமுல் குதுப்-பெய்ரூத் 1984-ம்ஆண்டு)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களின் ஒரு படையை பள்ளத்தாக்கின் மேற்புறத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும், தாம் நேரடியாக எந்த ஒரு சண்டையையும் எதிர் கொள்ளாமலேயே பள்ளத்தாக்கின் மையப் பகுதிக்கு சென்றுவிட்டார்கள். அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்தக் கோத்திரங்களின் சில மேய்ப்பர்கள் கிடைத்தார்கள்.அவர்களில் யஸார் என்ற பெயருடைய ஓர் அடிமையும் இருந்தான். அன்னார் (ஸல்) அவனிடம் பனூ ஸுலைம் மற்றும் பனூ கத்ஃபானைச் சேர்ந்த மக்களைக் குறித்து விசாரித்தார்கள். எனக்கு அவர்களைக் குறித்து எதுவும் தெரியாது; நானோ ஒட்டகங்களுக்கு தண்ணீர் மட்டுமே கொடுக்கின்றேன்; அதுவும் சில ஒட்டகங்களுக்கோ ஐந்தாம் நாள், சிலவற்றிற்கோ நான்காம் நாள் தான் எனக்கான முறை வரும் என்று அவன் பதிலளித்தான். மேலும், உள்ளூர் மக்கள் நீருற்றுகளின் மேற்புறம் ஏறிக் கொள்வார்கள். அதேநேரம் நாங்கள் ஒட்டக மந்தைகளுடன் இந்த விவகாரத்திலிருந்து முற்றிலும் விலகியவர்களாக இருக்கின்றோம் என்றும் அவன் கூறினான். எவ்வாறு இருப்பினும், அந்த மக்கள் போர் புரியும் எண்ணத்துடன் வந்திருந்த காரணத்தினால் அவர்களிடம் சாமான்கள் இருந்தன. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒட்டகங்களையும், மேய்ப்பர்களையும் சிறை பிடித்து விட்டார்கள். மூன்று இரவுகள் அன்னார் (ஸல்) அங்கு தங்கியிருந்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னார் (ஸல்) பத்து இரவுகள் அங்கு தங்கியிருந்தார்கள். அன்னார் (ஸல்) எவ்வளவு காலம் அங்கு தங்கியிருந்தார்களோ அதில் எவருக்கும் அன்னாருக்கு எதிரில் சண்டையிடுவதற்கு துணிவு வரவில்லை. இவ்வாறு அன்னார்(ஸல்) எவ்வித போருமின்றி வெற்றிப் பெற்று திரும்பி வந்துவிட்டார்கள். (ஷரஹ் அஸ்ஸகானீ அலல் மவாஹிபுல் லிதனீ, தொகுதி 2, பக்கம் 345, பனீ ஸுலைம் போர், தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத் 1996-ம் ஆண்டு)

ஓர் அறிவிப்பில் வந்துள்ளது. அதாவது, போர் செல்வங்களாக அன்னாருக்கு கிடைத்த ஒட்டகங்களின் எண்ணிக்கை ஐந்நூறாக இருந்தது. ஏனெனில், அந்த மக்கள் போருக்கான நோக்கத்துடன் வந்திருந்தனர். மேலும், தங்களது செல்வத்தை அங்கு விட்டுவிட்டுச் சென்று விட்டனர். எனவே அந்தக் காலத்தில் இருந்த நடைமுறைக்கேற்ப அவர்களுடைய அந்த செல்வங்களை எடுத்துக் கொள்வது ஆகுமானதாக இருந்தது. அவை போர் செல்வமாக இருந்தது. அதில் அன்னார் (ஸல்) ஐந்தில் ஒரு பங்கை எடுத்தார்கள். எஞ்சியவற்றை நானூறு முஸ்லிம்களிடம் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஒவ்வொரு போராளிக்கும் இரண்டு, இரண்டு ஒட்டகங்கள் கிடைத்தன. இந்தப் படை இருநூறு போராளிகளை உள்ளடக்கியதாக இருந்தது. யஸார் அன்னாருடைய பங்கில் வந்தபோது அன்னார் (ஸல்) அவரை விடுதலை செய்து விட்டார்கள். ஒட்டகம் மேய்ப்பராக இருந்த அவரை அன்னார் (ஸல்) விடுதலை செய்துவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காக பதினைந்து நாட்கள் வரை மதீனாவிற்கு வெளியில் தங்கியிருந்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத் ஃபீ ஸீரத் கைருல் இபாத், தொகுதி 4, பக்கம் 172,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்-1993-ம் ஆண்டு)

இதன் விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹிஜ்ரதிற்கு பிறகு மக்கத்து குறைஷிகள் பல்வேறு அரபு கோத்திரங்களில் சுற்றுப் பயணம் செய்து ஏராளமான கோத்திரங்களை முஸ்லிம்களின் உயிர்களுக்கு பகைவர்களாக ஆக்கிவிட்டனர். இந்தக் கோத்திரங்களில் வலிமை மற்றும் கூட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக நஜதின் மத்தியப் பகுதியில் வசிக்கக் கூடிய இரண்டு கோத்திரத்தினர் இருந்தனர். அவர்களின் பெயர்கள் பனூ ஸுலைம் மற்றும் பனூ கத்ஃபான் ஆகும். மேலும், மக்கத்து குறைஷிகள் குறிப்பாக இந்த இரண்டு அரபு கோத்திரங்களை தங்களுடன் கூட்டணி சேர்த்துக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக நிலைநிற்கச் செய்தனர்.

ஆக, சர் வில்லியம் மியூர் எழுதுகின்றார்: மக்கத்து குறைஷிகள் அப்போது தமது கவனத்தை நஜதின் பகுதிகளை நோக்கி திருப்பினர். மேலும், அந்தப் பகுதியைச் சேர்ந்த கோத்திரங்களுடன் முன்பு இருந்ததை விட கூடுதலான தொடர்புகளை உருவாக்கிக் கொண்டனர். மேலும், அந்த நேரத்திற்கு பிறகு ஸுலைம் மற்றும் கத்ஃபான் கோத்திரங்கள் முஹம்மது(ஸல்) அவர்களுடைய கடுமையான எதிரியாக ஆகிவிட்டனர். மேலும், அவர்களுடைய இந்தப் பகைமையானது முஸ்லிம்களுக்கு எதிரான செயல் வடிவம் அடைந்தது. எனவே குறைஷிகளின் தூண்டிவிட்டதும், அபூஸுஃப்யானுடைய செயல் முன்மாதிரியின் விளைவாகவும் அவர்கள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்கு உறுதியான திட்டங்களை தீட்டியிருந்தனர்.

இவர் மேற்கத்திய எழுத்தாளர் ஆவார். அவர்கள் ஒன்று சேர்ந்து மதீனாவின் மீது தாக்குதல் நடத்த விரும்பியிருந்தனர் என்று இவரும் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எனவே அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டதோ மேலும், கொண்டு வரப்பட்ட போர் செல்வங்கள் போன்றவை ஆகுமானதாக இருந்தது.

எவ்வாறு இருப்பினும், அடுத்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரிலிருந்து திரும்பி வந்தடைந்திருந்தபோது;அன்னார் (ஸல்) மதீனாவிற்கு வந்தடைந்து சில நாட்களே ஆகியிருந்தன. அந்நிலையில், ஸுலைம் மற்றம் கத்ஃபான் கோத்திரங்களுடைய ஒரு பெரும் படை மதீனாவின் மீது தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் கரகரா அல்குத்ர் என்ற இடத்தில் ஒன்று திரண்டு கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. பத்ர் போர் நடந்து முடிந்த இந்த அளவிற்கு குறுகிய காலத்திற்குள் இந்த தகவல் கிடைப்பது இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது. அதாவது, குறைஷிகளின் படை முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் மக்காவிலிருந்து புறப்பட்டிருந்ததால், நீங்கள் மற்றொரு பக்கமாக மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து விடுங்கள் என்ற செய்தியை குறைஷிகள் அப்போதே ஸுலைம் மற்றும் கத்ஃபான் கோத்திரங்களுக்கு, கொடுத்திருப்பார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. அல்லது இதுவும் சாத்தியமாகும். அதாவது, அபூஸுஃப்யான் தனது குழுவுடன் தப்பிச் சென்றுவிட்டபோது, ஒரு தூதுவர் போன்றவரின் மூலமாக அவர் இந்த கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராக புறப்படுவதற்கு தூண்டியிருக்கக் கூடும். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரை முடித்துக் கொண்டு மதீனாவிற்கு அப்போதுதான் வந்து சேர்ந்திருந்தார்கள். அதற்குள் ஸுலைம் மற்றும் கத்ஃபான் கோத்திரங்கள் முஸ்லிம்களின் மீது தாக்குதல் நடத்த இருக்கின்றன என்ற அபாயகரமான தகவல் கிடைத்தது. இந்த செய்தியைக் கேட்ட உடனேயே அன்னார் (ஸல்) ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தை உடன் அழைத்துக் கொண்டு எதிரிகளை தடுத்து நிறுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நஜதை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். ஆனால், அன்னார் (ஸல்) பல நாட்கள் துன்பம் மிகுந்த பயணத்தை மேற்கொண்டு அல்குத்ர் என்ற இடத்தில் குர்குராவை அதாவது பொட்டல் மைதானத்தை அடைந்தபோது, பனூ ஸுலைம் மற்றும் கத்ஃபான் கோத்திரத்து மக்கள் இஸ்லாமியப் படையின் வருகையின் செய்தியை அறிந்து மலைகளில் சென்று பதுங்கிக் கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபர்களை தேடுவதற்காக முஸ்லிம்களின் ஒரு சிறிய படையை அனுப்பி வைத்தார்கள். மேலும், சுயமே பள்ளத்தாக்கின் மையப் பகுதியை நோக்கி முன்னேறிச் சென்றார்கள். ஆனால், அவர்களைக் குறித்த எந்த தகவலும் கிடைக்கவில்லை. எனினும், அவர்களின் ஒட்டகங்களின் ஒரு பெரிய மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த நபர் கிடைத்துவிட்டார். அப்போது போர் சட்டங்களுக்கு ஏற்ப அதாவது அந்த காலத்தின் போர் சட்டங்களுக்கு ஏற்ப ஒரு ஸஹாபி அவற்றை கைப்பற்றி விட்டார். மேலும், அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி வந்துவிட்டார்கள். அந்த ஒட்டகங்களின் மேய்ப்பராக இருந்தவர் யஸார் என்ற பெயர் கொண்ட ஓர் அடிமை ஆவார். அவரும் ஒட்டகங்களுடன் சிறைபிடிக்கப்பட்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையின் தாக்கம் அந்த நபர் மீது எந்த அளவிற்கு ஏற்பட்டது என்றால், அப்போது அதிக காலம் கழிந்திருக்கவில்லை ; அதற்குள் அவர் முஸ்லிமாகிவிட்டார். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழக்கம்போல் அவரை கருணையின் அடிப்படையில் விடுதலை செய்துவிட்டார்கள். ஆயினும், அவர் மரணிக்கும் தருணம் வரை அன்னாருக்கு சேவை

செய்வதிலிருந்து விலகவில்லை. (ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 452-453)

அடுத்து, ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு, ஷவ்வால் அன்று நடைபெற்ற முஸ்லிம்களுடைய முதலாவது ஈதுல் ஃபித்ர் பெருநாள் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹிஜ்ரதுடைய இரண்டாம் ஆண்டில் ரமலான் மாதத்தின் முடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலாவது ஈதுல் ஃபித்ரை நிறைவேற்றினார்கள். (தாயிரா மஃஆருஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ், தொகுதி 6, பக்கம் 362, தாருல் மஃஆருஃப் லாஹூர் பதிப்பு, 2022-ம் ஆண்டு)

அறிவீனமானக் காலத்தில் நீங்கள் கொண்டாடி வந்த இரண்டு நாள் மகிழ்ச்சியின் உண்மைத்துவம் மற்றும் அந்தஸ்து என்ன? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அங்கு வசித்தவர்கள் இவ்வாறு கூறினர்: அதாவது இதற்கு முன்னர் நாங்கள் இப்போதும் நடைமுறையில் உள்ளபடியே இந்தப் பண்டிகையை முற்றிலும் கொண்டாடி வந்தோம். கூறினார்கள்: அல்லாஹ் இந்த இரண்டு பண்டிகைகளைக் காட்டிலும் சிறந்த நாளை உங்களுக்காக நிர்ணயித்துள்ளான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அது எந்த நாள்? என்று ஸஹாபா பெருமக்கள் மிகவும் ஆர்வத்துடன் கேட்டனர். அது ஈதுல் ஃபித்ர் மற்றும் ஈதுல் அழ்ஹா ஆகும். இந்த நாட்களில் எவரும் நோன்பு நோற்கக் கூடாது; மாறாக, உண்ணுங்கள்; பருகுங்கள்; மேலும் மகிழ்ச்சியை கொண்டாடுங்கள் என்று ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த இரண்டு நாட்களில் அன்னார் (ஸல்) பெருநாள் திடலிற்கு செல்வார்கள். பெருநாள் திடல் மதீனாவின் கிழக்குத் திசையின் பக்கம் இருந்தது. அன்னார் (ஸல்) பெருநாளன்று பெருநாள் திடலிற்கு ஒரு வழியில் செல்வார்கள். மேலும், வேறொரு வழிப்பாதையில் திரும்பிச் செல்வார்கள். இதனால் ஊர்வலத்தின் வடிவம் பெற்று வந்தது. மேலும் முஸ்லிம் அல்லாதவர்கள் மீது மதிப்பச்சம் ஏற்பட்டு வந்தது. ஒருமுறை ஈதுல் ஃபித்ருடைய தொழுகையை அன்னார் (ஸல்) மஸ்ஜித் நபவியிலும் தொழ வைத்தார்கள். ஏனெனில், அந்த தொழுகையின் நேரத்தில் மிகவும் கடுமையான மழை பொழிந்தது. (ஸய்யத் காஸிம் மஹ்மூத் அவர்களுடைய ஸீரத்துன்னபி (ஸல்) என்ஸைக்லோபீடியா, தொகுதி 1, பக்கம் 411, மக்தபா அல்ஃபைஸல் லாஹூர், 2014-ம் ஆண்டு)

இந்த ஈத் பெருநாளைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது, ஈதுல் ஃபித்ர் தொடர்பாக எழுதப்பட்டுள்ள விஷயம் இதுவாகும். ரமலானுடைய கடமையாக்கப்பட்ட நோன்பு நிறைவேற்றப்பட்ட பிறகு ரமலான் நிறைவடைய துவங்கும்போது அன்னார் (ஸல்) இறைவனிடமிருந்து கட்டளைப் பெற்று ஸதகத்துல் ஃபித்ர் கொடுப்பதற்கான கட்டளையை வழங்கினார்கள். அதாவது, ஒவ்வொரு முஸ்லிமும் எவருக்கு ஆற்றல் இருக்குமோ அவர் தன் சார்பாகவும், தனது குடும்பத்தினர் சார்பாகவும் ஒரு நபருக்கு ஒரு சாஹ் அளவு என்ற கணக்கில் பேரீத்தம் பழம் அல்லது தானியம் அல்லது கோதுமை போன்றவற்றை ஸதகாவாக பெருநாளிற்கு முன்னர் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். மேலும், இந்த ஸதகா ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், அனாதைகளுக்கும், விதவைகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். ஏனெனில் வசதி படைத்தவர்களின் சார்பாக நோன்பின் இறைவணக்கத்தில் ஏற்பட்ட பலவீனங்களுக்கான பரிகாரம் செலுத்தப்படுவதற்காகவும், பெருநாள் சந்தர்ப்பத்தின் போது ஏழைகளுக்கு உதவிகள் செய்வதற்கான சூழல் உருவாகுவதற்காகவும் இவ்வாறு செய்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையினால் ஒவ்வொரு ரமலான் பெருநாளுக்கு முன்னரும் முறையாக ஒவ்வொரு சிறியவர் மற்றும் பெரிய ஆண், பெண் முஸ்லிமிடம் இருந்து ஸதகத்துல் ஃபித்ர் வசூல் செய்யப்பட்டு வந்தது. மேலும், அனாதைகள், ஏழைகள், மற்றும் வழிப்போக்கர்களுக்கு அது பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது. ஈதுல் ஃபித்ரும் அதே ஆண்டில் தான் ஆரம்பமானது. அதாவது, ரமலான் மாதம் நிறைவடையும் போது ஷவ்வாலின் முதல் தேதியில் முஸ்லிம்கள் பெருநாள் கொண்டாடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அல்லாஹ் எங்களுக்கு ரமலானின் இறைவணக்கங்களை நிறைவேற்றுவதற்கு நற்பேறு வழங்கியுள்ளான் என்ற இந்த விஷயத்தின் மகிழ்ச்சியில் இந்த பெருநாள் அமைந்துள்ளது. ஆனால், இந்த மகிழ்ச்சியினை வெளிப்படுத்துவதிலும் கூட அன்னார் (ஸல்) ஓர் இறை வணக்கத்தையே நிர்ணயித்துள்ளார்கள் என்பது எவ்வளவு மகத்தானதும், மேன்மையானதும் ஆகும்!

எனவே பெருநாளன்று முஸ்லிம்கள் அனைவரும் ஒரு திறந்த மைதானத்தில் ஒன்று கூடி முதலில் இரண்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்று கட்டளை வழங்கினார்கள். மேலும், பின்னர் அந்த தொழுகைக்குப் பிறகு நிச்சயமாக ஆகுமான முறையில் வெளிப்படையான மகிழ்ச்சியையும் கொண்டாடுங்கள். ஏனெனில், ஆன்மாவின் மகிழ்ச்சிக்குரிய நேரத்தில் அந்த மகிழ்ச்சியில் பங்கேற்பதற்கு உடலுக்கும் உரிமை உள்ளது. உண்மையில், கூட்டாக நிறைவேற்றப்படும் பெரும் பெரும் இறை வணக்கங்களின் நிறைவில் இஸ்லாம் பெருநாட்களை வைத்துள்ளது. ஆக, தொழுகைகளின் பெருநாள் ஜுமுஆ ஆகும். அது ஒருவகையில் ஒவ்வொரு வாரத்தின் தொழுகைகளுக்கு பிறகு வருகின்றது. மேலும், அது இஸ்லாத்தில் அனைத்து பெருநாள்களையும் விடவும் சிறந்ததாக ஆக்கப்பட்டுள்ளது. பின்னர் நோன்புகளுக்கான பெருநாள் ஈதுல் ஃபித்ர் ஆகும். அது ரமலான் மாதத்திற்கு பிறகு வருகின்றது. ஹஜ்ஜுடைய பெருநாள் ஈதுல் அழ்ஹா ஆகும். அது ஹஜ்ஜிற்கு இரண்டாம் நாளன்று (அதாவது துல்ஹஜ் மாதம் பத்தாம் தேதியில்) கொண்டாடப்படுகின்றது. மேலும், இந்த அனைத்து பெருநாள்களும் பின்னர் சுயமே தன்னுள் ஓர் இறை வணக்கத்தைக் கொண்டுள்ளன. சுருக்கமாக, இஸ்லாத்தின் பெருநாள்கள் தன்னுள் ஒரு விநோதமான மகிமையைக் கொண்டுள்ளன. மேலும், அவற்றிலிருந்து இஸ்லாத்தின் உண்மைத்துவத்தின் மீது பெரும் ஒளிபாய்ச்சப்படுகின்றது. மேலும், இஸ்லாம் முஸ்லிம்களின் ஒவ்வொரு பணியையும் இறை தியானத்துடன் எவ்வாறு இணைக்க விரும்புகின்றது என்பதை இவற்றிலிருந்து அனுமானித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

எனவே எப்போதும் மகிழ்ச்சிகள் மட்டுமே கூடாது ; மாறாக, அல்லாஹ்வையும் நினைவிற் கொள்ள வேண்டும். மேலும் இறை வணக்கமும் செய்யப்பட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

கூறுகின்றார்கள்: எனக்கு வரலாற்றில் இருந்து விலக நேரிடுகின்றது; இல்லையென்றால், இஸ்லாம் எவ்வாறு ஒரு முஸ்லிம்முடைய ஒவ்வோர் அசைவையும், மௌனத்தையும், மேலும் ஒவ்வொரு சொல்லையும், செயலையும் இறைவனின் நினைவுடன் இணைக்கின்றது என்பதை நான் எடுத்துரைப்பேன். அன்றாட வாழ்க்கையில் எழுதல், அமர்தல், வலம் வருதல், உறங்குதல், விழித்தல், உண்ணுதல், பருகுதல், குளித்தல், ஆடை மாற்றுதல், காலணி அணிதல், வீட்டிலிருந்து வெளியேறுதல், வீட்டினுள் நுழைதல், பயணத்தில் செல்லுதல், பயணத்திலிருந்து திரும்பி வருதல், ஒரு பொருளை விற்றல், ஒரு பொருளை வாங்குதல், உயரத்தில் ஏறுதல், உயரத்தில் இருந்து கீழே இறங்குதல், பள்ளிவாசலில் நுழைதல், பள்ளிவாசலில் இருந்து வெளியேறுதல், நண்பர்களை சந்தித்தல், எதிரியை எதிர் கொள்ளுதல், புதிய பிறையைப் பார்த்தல், மனைவியிடம் செல்லுதல் என சுருக்கமாக ஒவ்வொரு பணியின் ஆரம்பத்திலும், முடிவிலும் எதுவரையென்றால் தும்மல் மற்றும் கொட்டாவி விடுதல் வரையிலும் கூட ஏதாவது ஒரு வகையில் இறைவனின் நினைவுடன் அவற்றை இஸ்லாம் தொடர்பு படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அரேபிய இணை வைப்பாளர்கள் உண்மையில் இந்த போதனைகளைக் கொண்டு வரக்கூடிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறக் கூடும். அதாவது, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இறை பித்து பிடித்து விட்டது என்று அவர்கள் கூறினால் அதில் ஆச்சரியத்திற்குரிய விஷயம் எதுவும் இல்லை. உண்மையில் ஓர் உலகவாதிக்கு இந்த விஷயங்களில் பித்துபிடித்தலை தவிர்த்து வேறு எதுவும் தென்பட முடியாது. ஆனால், எவர் தனது இருப்பின் உண்மைத்துவத்தை புரிந்துள்ளாரோ அவர் இதன் பெயரே வாழ்க்கையாகும் என்பதை அறிகின்றார். (ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 337- 338)

மனிதனுக்கு இறைவனின் நினைவு எப்போதும் இருப்பதே உண்மையான வாழ்க்கையாகும்.

இந்தக் காலத்தில் பத்ர் போருக்கு பிறகும், உஹது போருக்கு முன்பும் இரண்டு ஒப்புமை கொண்ட சம்பவங்களின் குறிப்பும் கிடைக்கின்றது. அவற்றை மேலோட்டமாக ஆய்வு செய்தாலும் கூட பின்னர் தெளிவாக வெளிப்படுகின்றது. மேலும், அது புனையப்பட்ட கதை ஆகும் என்று தெளிவாக தெரிய வருகின்றது.

முதலாவது சம்பவம், அஸ்மாஃ பின்த் மர்வானின் கொலையாகும். அவர் கொலை செய்யப்பட்டார் என்று எடுத்துரைக்கப்படுகின்றது. அதன் விளக்கத்தில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் உமைர் பின் அதீ கித்மீ என்ற ஒரு கண்பார்வையற்ற ஸஹாபி இருந்தார்கள். ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் பனூ கித்மா கோத்திரத்தில் முதன் முதலில் முஸ்லிமாகியிருந்தார்கள். ஹிஜ்ரதுடைய இரண்டாம் ஆண்டாக இருந்தது. ரமலானுடைய ஐந்து இரவுகள் மீதமிருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமைர் பின் அதீ கித்மீ அவர்களை, யூதப் பெண்மணியாக இருந்த அஸ்மாஃ பின்த் மர்வானிடம்(அவரை கொலை செய்வதற்காக) அனுப்பி வைத்தார்கள். மேலும், அந்தப் பெண்மணி,முஸ்லிமாகியிருந்த மர்ஸத் பின் ஸைத் பின் ஹிஸ்ன் அன்ஸாரி (ரலி) அவர்களின் மனைவியாக இருந்தார். அஸ்மாஃ பின்த் மர்வானை கொலை செய்வதற்கு கட்டளையிடப்பட்டதற்கான காரணம் என்னவாக இருந்தது என்றால் அவர் இஸ்லாத்தை ஏசிபேசிக் கொண்டிருந்தார் என்று எடுத்துரைக்கப்படுகின்றது. இஸ்லாத்தை அவர் ஏசிபேசி வந்து கொண்டிருந்தார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக மக்களை தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார். மேலும் கவிதைகளை கூறிக் கொண்டிருந்தார். எனவே அவரைக் கொலை செய்வதற்காக அந்த ஸஹாபி அனுப்பப்பட்டார் என்று கூறுகின்றனர்.

இந்தப் பெண்மணி மஸ்ஜித் நபவியில் அசுத்தமான ஆடைகளை கொண்டு சென்று வீசி வந்தார் என்று ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது.அந்தக் கதையை உருவாக்குவதற்காக இந்த அறிவிப்பில் இவையும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு அவர் துன்பம் இழைத்து வந்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் இரவின் இருளில் அந்தப் பெண்ணின் வீட்டில் நுழைந்தார்கள். அவளது பிள்ளைகள் அவருக்கு அருகில் உறங்கிக் கொண்டிருந்தனர். மேலும், அவள் ஒரு குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்தாள். உமைர் தமது கைகளால் அவரை எழுப்பினார். மேலும் அந்தக் குழந்தையை அவளிடமிருந்து விலக்கினார். மேலும் தமது வாளை அவளது நெஞ்சில் வைத்து முழுமையான அழுத்தத்துடன் குத்தி விட்டார். எந்த அளவிற்கு என்றால், வாள் அவளது முதுகை கிழித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டது. அதன் பிறகு உமைர் பின் அதீ மதீனாவிற்கு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பின்னால் ஸுபுஹ் தொழுகையை நிறைவேற்றினார்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை

முடித்து விட்டு எழுந்த போது, அன்னார் (ஸல்) அவர்களின் பார்வை உமைரின் மீது பட்டது. நீர் மர்வானின் மகளை கொலை செய்துவிட்டீரா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு ஆம்! என்று அவர் கூறினார். மேலும், அவரைக் கொலை செய்ததன் விளைவாக என் மீது ஏதாவது பாவம் சுமத்தப்படுமா? என்றும் அவர் கேட்டார்.

தற்போது இதனைக் கேட்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை அனுப்பினார்கள் என்று ஒரு பக்கம் எழுதியுள்ளனர். ஆனால், தற்போது அந்தக் கொலையின் விளைவாக தம் மீது பாவம் சுமத்தப்படுமா? என்று அவர் கேட்டதாக எழுதுகின்றனர். அன்னார் (ஸல்) அதற்கு பதிலாக அரபியின் ஒரு பிரபலமான பழமொழியைக் கூறினார்கள். மேலும், لَا يَنْتَطِحُ فِيهَا عَنْزَانِ என்று கூறினார்கள்.

இதன் காரணமாக ஆடுகள் கூட தங்களுக்கிடையில் சண்டையிடாது. அதாவது, அந்தப் பெண்ணின் கொலை என்பது எவ்வளவு சிறியதாகும் மற்றும் சாதாரணமானதாகும் என்றால் இதனை எதிர்க்கக் கூடியவர் கூட இதனை எதிர்க்க மாட்டார்.

எழுதுகின்றனர்: இந்த வார்த்தை அல்லது பழமொழி எப்படிப்பட்ட வார்த்தைகளை சார்ந்தது என்றால் அவை இறைத் தூதர் (ஸல்) அவர்களை தவிர்த்து வேறு எவருடைய நாவிலிருந்தும் கேட்கப்படவில்லை. இந்த ஓர் அறிவிப்பே இங்கு கிடைக்கின்றது.

எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமைரின் பெயரை பஸீர் அதாவது பார்வையுடையவர் என்று வைத்துவிட்டார்கள். இறைக் கட்டளைக்கு கட்டுப்படுவதில் இரவைக் கழித்த இந்தக் குருடரின் பக்கம் பாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, அவரை குருடர் என்று கூறாதீர்கள். மாறாக, பார்வையுடையவர் என்று கூறுங்கள் என அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் அஸ்மாஃவுடைய கொலை சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அஸ்மாஃ பின்த் மர்வானை கொலை செய்வதற்கு எண்ணம் கொண்டபோது, இந்தப் பெண்ணிடம் இருந்து எமக்கு இரட்சிப்பு வழங்கக் கூடிய எந்த நபராவது இருக்கின்றாரா? என்று அன்னார் (ஸல்) மக்களிடம் கேட்டார்கள். அப்போது, அவளது கதையை முடிப்பது எனது பொறுப்பாகும் என்று உமைர் பின் அதீ கூறினார். அதன் பிறகு, அன்னார் அஸ்மாஃவிடம் சென்றடைந்தார்கள். அந்தப் பெண்மணி பேரீத்தம் பழம் விற்றுக் கொண்டிருந்தார். உமைர் அவளுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த பேரீத்தம் பழங்களின் பக்கம் சைகை செய்து, உம்மிடத்தில் இந்த பேரீத்தம் பழங்களைக் காட்டிலும் நல்ல பேரீத்தம் பழங்கள் இருக்கின்றனவா? என்று கேட்டார்கள். ஆம்! என்று அவள் கூறினாள். மேலும், அவ்வாறு கூறிவிட்டு அவள் தனது வீட்டினுள் சென்றாள். மேலும், அவள் பேரீத்தம் பழங்களை எடுப்பதற்காக குனிந்தாள். அவர் கூறுகின்றார்: நான் வலப்புறமும், இடப்புறமும் பார்த்தேன். நான் அவளது தலையில் தாக்குதல் நடத்தினேன். மேலும் அவளை கொன்று விட்டேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களிடம், அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு உதவி செய்த நபரின் பக்கம் பார்க்க விரும்பினீர்கள் என்றால் பின்னர் உமைர் பின் அதீயை பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அஸ்மாஃ பின்த் மர்வானின் கொலையை ஆகுமானதாக ஆக்கியுள்ளார்கள். அப்போது, பத்ர் போரிலிருந்து பாதுகாப்புடன் மதீனா வந்தடைவதற்கு அல்லாஹ் தனது தூதருக்கு நற்பேறு வழங்கினான் என்றால் நான் அஸ்மாஃ பின்த் மர்வானை கொலை செய்வேன் என்று ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் வேண்டுதல் செய்திருந்தார்கள். அதாவது பத்ர் போரில் செல்வதற்கு முன்னர் இந்தக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. மேலும், நான் போரில் இருந்து திரும்பி வந்த பிறகு(அவளை) கொலை செய்வேன் என்று அன்னார் கூறினார்கள்.

ஆக, அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் பத்ர் போரிலிருந்து வெற்றிவாகை சூடி மதீனா முனவ்வராவிற்கு திரும்பி வந்துவிட்டபோது ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் தமது வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக அஸ்மாஃ பின்த் மர்வானின் வீட்டிற்கு சென்று அவளை கொன்று விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: அஸ்மாஃ பின்த் மர்வானை கொலை செய்த பிறகு ஹஸ்ரத் உமைர் (ரலி) அந்த வீதிக்கு திரும்பி வந்தார்கள். அப்போது, அந்தப் பெண்ணின் மகன் ஒரு கூட்டத்தினருடன் தனது தாயை அடக்கம் செய்து கொண்டிருந்தார். அப்போது, உமைரைப் பார்த்து விட்டு, உமைரே! நீரா இவரைக் கொலை செய்தீர்? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு, ஆம் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பின்னர்,

فَكِيْدُوْنِي جَمِيْعًا ثُمَّ لَا تُنْظِرُوْنِ

என்று கூறினார்கள். பின்னர் நீங்கள் அனைவரும் இணைந்து எனக்கு எதிராக திட்டம் தீட்டுங்கள்; பின்னர் எனக்கு எந்தக் காலக்கெடுவும் கொடுக்காதீர்கள். எந்த இறைவனின் கட்டுப்பாட்டில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவனின் மீது ஆணையாக!நீங்கள் அனைவரும் இணைந்து கொண்டு இந்தப் பெண்மணி கூறிய அதே விஷயத்தைக் கூறினாலும் கூட நான் உங்கள் அனைவருடைய கழுத்தையும் வாளால் துண்டிக்க துவங்கி விடுவேன். எந்த அளவிற்கு என்றால், ஒன்று நான் ஷஹீது ஆகிவிடுவேன் அல்லது உங்களை நரகத்தில் இறக்கி விடுவேன். அந்த நாளன்று பனூ கத்மா கோத்திரத்தில் இஸ்லாம் மிகவும் வெளிப்படையாக பரவத் தொடங்கியது. இல்லையென்றால், அதற்கு முன்னர் அவர்களில் முஸ்லிம்களாக மாறியிருந்த மக்களும் கூட தாங்கள் முஸ்லிம்களாகிவிட்டதை மறைத்து வந்தனர்.

அல்லாமா ஸுஹைலீ எழுதியுள்ளார்கள்: அஸ்மாஃவை கொலை செய்யக் கூடியவர் அவரது கணவராக இருந்தார். மேலும், இஸ்தீஆப் நூலில் ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்களின் நிலைமையின் கீழ் எழுதப்பட்டுள்ளது: அன்னார் தமது சகோதரியையும் கூட கொலை செய்திருந்தார்கள். ஏனெனில், அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை ஏசிபேசிக் கொண்டிருந்தார்கள். ஆயினும், இஸ்தீஆப் நூலில் உமைரின் சகோதரியின் பெயரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. (ஸீரத் ஹல்பியா, (மொழியாக்கம்)- தொகுதி 3, பக்கம் 482-485, தாருல் இஷாஅத் பதிப்பு, 2009-ம் ஆண்டு)

ஆக,இந்த முழுக் கதையும் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் சில நூல்களில் இந்த சம்பவம் கிடைக்கின்றது. ஆனால், ஸிஹாஹ் ஸித்தாவிலும், ஹதீஸுடைய எந்தவொரு நம்பத் தகுதந்த நூலிலும் இந்த சம்பவம் குறிப்பிடப்படவில்லை.

நடந்த விஷயம் என்னவென்றால், பிற்காலத்தில் சில மக்கள் இதுபோன்ற கற்பனையின் மற்றும் கட்டுக்கதையையும், சம்பவங்களையும் தமது நூல்களில் மட்டும் இடம் கொடுக்கவில்லை.மாறாக, நபித்துவ நிந்தனைக்கான தண்டனை தொடர்பான சான்றுகளாக இதனை முன் வைக்கத் துவங்கியுள்ளனர். மேலும், இன்றைய நாட்களில் முல்லாக்கள் இந்த விஷயங்களை எடுத்துக் கொண்டு, நபித்துவ நிந்தனை செய்பவரை கொலை செய்து விட வேண்டும் என்பற்கான என்று இந்த சான்றுகளை கொடுக்கின்றனர். ஆனால்,**நபித்துவ நிந்தனைக்கு இதுபோன்ற எந்த வகையான தண்டனையும் இஸ்லாமிய ஷரீஅத்தில் இடம் பெறவுமில்லை. மேலும், இதுபோன்ற சம்பவங்களுக்கு எந்த உண்மைத்துவமும் இல்லை.**

உதாரணமாக, நாம் இந்த சம்பங்களை ஆய்வின் அடிப்படையில் படிக்கும்போது முதலில் (ஸனத் எனும்) சான்றின் அடிப்படையில் இந்த அறிவிப்பு பலவீனமானதாகும் என்பது தெரிய வருகின்றது. அல்லாமா அல்பானீ அவர்கள் இந்த ஹதீஸை மோமு எனும் பலவீனமானதாக குறிப்பிட்டு விட்டார்கள். ஆக, அல்லாமா நாஸிருத்தீன் அல்பானீ அவர்கள் ஸில்ஸிலத்துல் அஹாதீஸ் அழ்ழயீஃப் வல் மவ்ழுவஃ என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதன் ஓர் அறிவிப்பாளர் பொய்யரான முஹம்மது பின் உமர் வாகிதீ ஆவார். இப்னு மயீன் அவர்கள் அதனை பலவீனமான ஹதீஸ் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஸில்ஸிலத்துல் அஹாதீஸ் அழ்ழயீஃபா வல் மவ்ழுவா,தொகுதி 13, பக்கம் 34 -35, அறிவிப்பு எண்: 6013, மக்தபல் மஆரிஃபிர் ரியாழ், 2004-ம் ஆண்டு)

இது மட்டுமின்றி தராயத்தின் அடிப்படையில் பார்த்தாலும், இந்த அறிவிப்பைக் குறித்து பல கேள்விகள் எழுகின்றன. உதாரணமாக, ஸஹாபி பார்வையற்றவராக இருந்த போதிலும் அந்தப் பெண்ணின் வீடு வரை தனியாக எவ்வாறு சென்றடைந்தார்கள்? அன்னார் ஏற்கனவே சென்று வந்தார்கள்; எனவே அறிந்த வழிப்பாதையாக இருந்தது என்று அவர்கள் கூறக் கூடும். தொடர்ந்து செல்லும்போது பின்னர் வழிப்பாதை தட்டுத் தடுமாறி சென்றடைந்திருப்பார்கள். ஆனால், குறிப்பாக இரவு நேரத்தில் தனியாக அங்கு சென்றடைந்தும் விட்டார்கள்; மேலும், வாசலையும் சென்றடைந்து விட்டார்கள்; உள்ளேயும் சென்றடைந்து விட்டார்கள். பின்னர், அன்னார் அந்தப் பெண்ணை இரவின் இருளில் எவ்வாறு தேடிக் கண்டுபிடித்தார்கள்? அவருக்கு அருகில் குழந்தைகளும் உறங்கிக் கொண்டிருக்கின்றன என்பது அன்னாருக்கு எப்படி தெரிந்தது? சரி, ஒவ்வொருவரையும் தட்டுத் தடவிக் கொண்டிருந்தார்; பின்னர் அறிந்து கொண்டார் என்று வைத்துக் கொள்வோம். அப்படியென்றால் அப்படி அவர் தொட்டுத் தடவிக் கொண்டிருந்தபோது எவரும் கண் விழித்திருக்க மாட்டார்களா? அந்தப் பிள்ளைகள் பால் குடித்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும் தொட்டுத் தடவியே அறிந்து கொண்டு விட்டார்களா? அடுத்து, அந்தப் பெண்மணி தனது மரணத்தைக் கண் முன் பார்த்த பிறகும் கூட அந்த கண் பார்வையற்றவரிடமிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள அல்லது குழந்தைகளை காப்பாற்றுவதற்காக எந்த முயற்சியோ அல்லது போராட்டமோ செய்யவில்லையா? ஆனால், அந்த அறிவிப்பின் படி, கொலையாளி பால் குடித்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தையை வலுக்கட்டாயமாக விலக்கி விட்டார். அவரோ கண் பார்வையற்றவராக இருந்தார். மேலும், அந்தப் பெண்ணிற்கு கண்கள் இருந்தன. அப்போது கூட அவர் கூச்சலிடவில்லையா? எந்தப் போராட்டமும் செய்யவில்லையா? அவரது கணவரும் அங்கு உறங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு கூட எந்த தகவலும் இல்லாமல் போய்விட்டதா? எல்லாவற்றையும் விட இந்தக் கேள்வி எழுகின்றது. அதாவது அந்த கண் பார்வையற்ற ஸஹாபிக்கு ஒருவர் குரல் கொடுக்கமலேயே அந்தப் பெண்ணே அஸ்மாஃ பின்த் மர்வான் என்று எப்படி தெரிந்தது? பொதுவாக, கண்பார்வையற்றவர்கள் சப்தத்தை வைத்தே அடையாளம் கண்டு கொள்கின்றனர்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது அல்லவா! கதைகளும் பலதரப்பட்டவையாக இருக்கின்றதே!இரண்டாவது கதை இதுவாகும். அதாவது அந்தப் பெண்மணி பேரீத்தம் பழங்களை எடுப்பதற்கு உள்ளே சென்றபோது ஸஹாபி இங்கும், அங்கும் பார்த்தார். அப்போது எவரும் தென்படவில்லை என்று கதையில் வருகின்றது. ஸஹாபியோ கண் பார்வையற்றவராக இருந்தார் என்பது சிந்திக்கத் தகுந்த விஷயம் ஆகும். அந்நிலையில் இங்கும், அங்கும் அன்னாரால் எப்படி பார்த்திருக்க முடியும்? மேலும், நான் இங்கும், அங்கும் பார்த்தேன் அப்போது எவரும் தென்படவில்லை என்று எவ்வாறு கூறியிருக்க முடியும்? இன்னும் கூறப்போனால், ஏற்கனவே இருந்த அந்த பேரீத்தம் பழங்களை பார்த்துவிட்டு இவை நல்ல பழங்கள் இல்லை என்றும் அன்னார் அனுமானித்து விட்டார்கள். இது எப்படி சாத்தியம்? கைகளைக் கொண்டு தடவி பார்த்தார் என்று ஒருவர் கூறலாம்; சரி இருக்கட்டும்!

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 26 octber- 09 November 2023 Issue No. 43- 45

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஆனால், இங்கும் அங்கும் பார்த்தார்கள் என்ற விஷயம் எப்படி சாத்தியம்?

ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: அதாவது, அந்த ஸஹாபி அந்தப் பெண்ணை கொலை செய்த பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சென்றடைந்தார்கள். மேலும், அவளை கொலை செய்தது தொடர்பான தகவலைக் கொடுத்தார்கள். மேலும், மீண்டும் அங்கு திரும்பி வந்தபோது அந்தப் பெண்ணின் மகன்கள் அவளை அடக்கம் செய்து கொண்டிருந்தனர்.

இங்கு இதுவும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய விஷயம் ஆகும். அதாவது, ஒருபுறம் அவர் அவளை கொலை செய்கின்றார்; மறுபுறம் அவரது மகன்கள் சிறிது நேரத்திலேயே அடக்கம் செய்வதற்காக வந்துவிடுகின்றார்கள். இது எப்படி சாத்தியம் ஆகும்? குறுகிய நேரத்திலேயே உடனடியாக எல்லா பணிகளும் நடந்து விட்டன. இது எப்படி சாத்தியம்? நம்மவர்கள் இதனையும் ஆய்வு செய்துள்ளார்கள். அதனையும் நான் எடுத்துரைத்து விடுகின்றேன். அதாவது, இதனை தவிர்த்து இன்னும் பல முரண்பாடுகள் இந்த சம்பவம் கற்பனையானது மற்றும் இட்டுக்கட்டப்பட்டது என்பதை நிரூபணம் செய்கின்றன. அவற்றில் ஒன்று இதுவாகும். அதாவது, பெரும்பாலான அறிவிப்புகளில் பெண்ணின் பெயர் அஸ்மாஃ பின்த் மர்வான் என்றே வந்துள்ளது. அதேநேரம் அல்இஸ்தீஆப் நூலாசிரியரின் பார்வையில் அவர் அஸ்மாஃ இல்லை. மாறாக, உமைருடைய சகோதரி பின்தே அதீ ஆவார். (அல்இஸ்தீஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப், தொகுதி 3, திக்ர் உமைர் பின் அதீ அல்கத்மீ, பக்கம் 291, மக்தபா தாருல் இல்மியா, பெய்ரூத் 2002-ம் ஆண்டு)

அடுத்து, கொலையாளியின் பெயர் பெரும்பாலான அறிவிப்புகளில் உமைர் பின் அதீ என்று வந்துள்ளது. ஆனால்,சில இடங்களில் அம்ர் பின் அதீ என்றும் வந்தள்ளது.(ஜவாமிஃ அஸ்ஸீரத் லி இப்னி ஹிஸ்ம், பக்கம் 19, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2003-ம் ஆண்டு) ஆனால், இப்னு துரைத் என்பவரைப் பொருத்த வரை கொலையாளியின் பெயர் கிஷ்மீர் ஆகும். (ஷரஹ் ஸர்கானி அலல் மவாஹிப் அல்லுத்துன்யா, பாகம் 2, பக்கம் 342, தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத் 1996-ம் ஆண்டு பதிப்பு)

சில அறிவிப்புகளின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்டவர்களில் எவரும் கொலையாளி கிடையாது. மாறாக, அந்தப் பெண்ணின் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் அவள் பேரீத்தம் விற்றுக் கொண்டிருந்தபோது அவளைக் கொன்று விட்டார். (அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத்,தொகுதி 2, பக்கம் 21, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1990-ம் ஆண்டு பதிப்பு)

இப்னு ஸஅதை பொருத்தவரை கொலை நிகழ்ந்த நேரம் இரவின் நடுப்பகுதியாகும். அதேநேரம் ஸர்கானீயுடைய அறிவிப்பின்படி பகல் அல்லது மாலை நேரம் என்று வெளிப்படுகின்றது. ஏனெனில், அறிவிப்பின்படி அந்தநேரத்தில் கொலையுண்ட பெண் பேரீத்தம் பழம் விற்றுக் கொண்டிருந்தார்.(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத்,தொகுதி 2, பக்கம் 21, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1996-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து இவ்வாறும் உள்ளது. அதாவது, இந்த சம்பவம் நிகழ்ந்த வழிமுறையிலும் முரண்பாடு உள்ளது. கொலையுண்டப் பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டது; அவளுடைய வயிற்றில் கத்தி போன்றவற்றால் குத்தி அவள் கொலை செய்யப்பட்டாள். அவள் இரவு நேரத்தில் தூங்கிக் கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்டாள் அல்லது பேரீத்தம் பழம் வாங்குகின்ற சாக்குபோக்கில் அவளது வீட்டினுள் சென்று அவளது கழுத்து நெரிக்கப்பட்டது. பின்னர் இவ்வாறும் உள்ளது. அதாவது, ஸீரத் இப்னு ஹிஷ்ஷாமைப் பொருத்த வரை அபூ அஃபக் கொலை செய்யப்பட்டபோது அந்தப் பெண்மிண நயவஞ்சகள் ஆகிவிட்டாள். இந்த வாக்கியத்தில் இருந்து இந்த விஷயம் வெளிப்படுகின்றது: அதாவது, அவள் முதலில் முஸ்லிமாக இருந்தாள். மேலும், அபூஅஃபக் கொலை செய்யப்பட்டதை கேள்விப்பட்டு நயவஞ்சகள் ஆகிவிட்டாள். அவள் இதற்கு முன்னர் முஸ்லிமாக இருந்தாள் என்றால் பின்னர் அவள் எப்படி ஹுஸூர் (ஸல்) அவர்களின் மகிமைக்கு எதிராக ஏளனம் செய்தவாறு கவிதைகளை எழுதியிருக்க முடியும்? மேலும், மஸ்ஜிதை எப்படி இழிவுபடுத்தியிருக்க முடியும்?

வாகிதீயின் அறிவிப்பிற்கேற்ப உமைர் இவ்வாறு கூறினார்: அல்லாஹ்வே! நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் மதீனாவிற்கு திரும்பி சென்றுவிட்டால் பின்னர் நான் நிச்சயமாக அவளை கொலை செய்துவிடுவேன் என்பது நான் உன்னிடம் செய்கின்ற வேண்டுதலாகும். ஆனால், தாயிரா மஆருஃப் ஸீரத் முஹம்மது (ஸல்) அவர்கள் என்ற நூலாசிரியரின் கூற்றின்படி அவரோ கண்பார்வையற்றவராக இருந்தார்; மேலும், இதன் காரணமாக அவரால் பத்ர் போரில் கலந்து கொண்டிருக்கவே முடியாது.

மேலும், அவர் கண்பார்வையற்றவராக இருந்தபோதிலும் ஜிஹாதில் பங்கெடுத்திருந்தார் என்ற வாகிதீயுடையக் கூற்றை அதே நூலாசிரியர் இந்த சம்பவத்தின் பின்னணியில் குறிப்பிட்டிருக்கின்றார். (தாயிரா மஆருஃப் ஸீரத் முஹம்மது (ஸல்) அவர்கள் என்ற நூல்-பக்கம் 428-429, தாருல் மஆருஃப் லாஹூர் பதிப்பு-2022-ம் ஆண்டு)

சுயமே தவறான வகையான அறிவிப்புகளை கலந்து வைத்துவிட்டார். ஒருவேளை இவை கற்பனையாக, இட்டுக்கட்டப்பட்ட சம்பவம் இல்லையென்றால் பின்னர் வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் சிலவற்றில் உதாரணமாக, தாரீகே தப்ரீ, தாரீகே இப்னு கஸீர், போன்றவை இந்த சம்பவத்தை பற்றி ஏன் குறிப்பிடவில்லை? சில நூல்கள் மட்டுமே உதாரணமாக, தப்காதுல் குப்ரா இப்னி லி ஸஅத் போன்றவை மட்டும் ஏன் மேலோட்டமாக குறிப்பிட்டுள்ளன. அதேநேரம் சிலரோ முற்றிலுமாகவே இந்த சம்பவத்தை பற்றி குறிப்பிடவேயில்லை. ஆனால் வாகிதீ இந்த சம்பவத்தை மற்றவர்களைக் காட்டிலும் விளக்கமாக குறிப்பிட்டுள்ளார்.


ஹதீஸ் நூல்களிலும் இந்த சம்பவத்தைப் பற்றிய குறிப்பு கிடைக்கவில்லை. ஹதீஸ் நூலாசிரியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புடைய அந்த அனைத்து அறிவிப்புகளுக்கும் தமது நூல்களில் இடமளித்துள்ளனர். அவ்வாறிருக்க, இந்த சம்பவத்தைப் பற்றி மட்டும் ஏன் குறிப்பிடவில்லை?


அடுத்து இந்த விஷயமும் உள்ளது. அதாவது இந்த அறிவிப்பின் அடிப்படையில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சுயமே அந்த ஸஹாபியை அந்தப் பெண்ணைக் கொலை செய்வதற்காக அனுப்பினார்கள். அப்படியென்றால், பின்னர் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, அவளைக் கொன்றதனால் எனக்கு பாவம் உண்டாகுமா? என்று அந்த ஸஹாபி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்பதன் பொருள் என்ன இருக்கின்றது?

இந்த சம்பவம் நிகழ்ந்திருந்தால் பின்னர், முஸ்லிம்கள் முதலில் அஸ்மாஃ பின்த் மர்வானைக் கொலை செய்து செயல்ரீதியில் உடன்படிக்கையை முறித்துள்ளார்கள்; மேலும் மதீனாவின் அமைதியை சீர்குலைக்க விரும்புகின்றார்கள் என்று யூதர்கள் கண்டிப்பாக கூறியிருப்பார்கள். அதேநேரம் வரலாற்றாசிரியர்கள் உதாரணமாக, முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்குமிடையில் நிகழ்ந்த முதல் சண்டை என்பது பனூ கைனிகாஃ போர் ஆகும் என்பதில் அர்ரூலுல் உன்ஃப் மற்றும் தாரீகுத் தபரீ ஏற்றுக் கொண்டுள்ளது.( அர்ரூலுல் உன்ஃப் தொகுதி 3, பக்கம் 225, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்) (தாரீே தபரீ, தொகுதி 2, பக்கம் 48, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012-ம் ஆண்டு)

சுயம் யூதர்களிடமிருந்து அப்படியொரு எந்த எதிர் நடவடிக்கையும் இல்லை. எனவே இந்த விவகாரம் இந்த சம்பவத்தை மிக அதிகமாக சந்தேகத்திற்குரியதாக ஆக்குகின்றது. இன்னும் கூறப்போனால் தவறானதாக நிரூபிக்கின்றது.தீவிரவாதத்தை விரும்புகின்ற முல்லாக்கள் இந்த சம்பவங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இஸ்லாத்தின் அழகிய போதனையை இழிவுபடுத்தியுள்ளனர். மேலும், இன்றைய நாட்களில் இதேபோன்று கட்டுக்கதைகளை உருவாக்கி இந்த மவ்லவிகள் அஹ்மதிகளுக்கு எதிராகவும் தீவிரவாதத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். மேலும், பொதுமக்களை தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றனர். இதைப் போன்ற மற்றொரு சம்பவமும் இருக்கின்றது. அது இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும். அந்த சம்பவமும் தவறானது என்று நிரூபணமாகின்றது.

தமிழாக்கம்:
முபல்லிஃக் A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad